சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 35 27-9-'42 Price 2 Annas



மூன்று தலைமுறைகள்

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிருள்.

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND

சென்ற வார நிகழ்ச்சிகள்

*

இந்தியா சட்டசபைக் கூட்டம்

இம்மாதம் 15-ந்தேதி நடந்த இந்தியா சட்டசபைக் கூட்டத்தில் ஸர். ஆர். மாக்ஸ்வெல் ராஜீய நிலைமையைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தார். அவர் 55 நிமிஷம் பேசினார். இந்தப் பிரசங்கம் மிஸ்டர் சர்ச்சில் பிரசங்கத்தோரணையில்தானிருந்தது.

காங்கிரஸ் ஒரு சிலருக்கு மட்டும்தான் பிரதிநிதி ஸ்தாபனமாக விருக்கிறதெனச் சொல்லி ஒரு பாசாங்கு காட்ட ஹோம் மெம்பரால் முடியாது போய்விட்டது. காங்கிரஸ் செய்த குற்றம் மிகப்பெரியதென்று காட்டுவதற்கும் அவர் முயன்று பார்த்தார்.

இந்தக் கலவரம் ஒரு இடத்தில் மட்டுமில்லாமல் பலவிடங்களிலும் நடந்து வருவதாலும், மிக்க திறமையுடனும் சாஸ்திர நுணுக்கங்களை அறிந்தும் கலகக்காரர்கள் நாசவேலையைச் செய்து வருவதாலும், அதிலும் நிலக்கரித் தொழிலில் முன்னணியில் நிற்கும் முக்கியமான மாகாணமாகிய பீஹாரில்தான் கலவரம் அதிகமாக நடப்பதாலும், இந்தக் காரியங்கள் யாவும் முன்னேற்பாடுடன் நடப்பதாகவே ஊகிக்க வேண்டியிருக்கிறதாகவும் இந்தக் கலவரங்கள் சம்பந்தமாக விமானங்கள் உபயோகிக்கப்பட்டதாகவும் ஹோம் மெம்பர் ஒப்புக்கொண்டார்.

நாட்டின் பாதுகாப்பைக் குலைக்க வழி தேடியவர்களை விடுவித்து அவர்களிடம் அதிகாரத்தைக் கொடுத்து யுத்த ஏற்பாடுகளைக் கவனிக்கும்படிச் சொன்னால் அதை எவ்விதம் ஏற்றுக்கொள்வதென்று அவர் கேட்டிருப்பதிலிருந்து சீக்கிரத்தில் சமரஸத்துக்கான வழி தேடும் முயற்சியில் இறங்கியுள்ளவர்களுக்குச் சற்றும் தைரியம் ஏற்படவில்லை.

* * * *

இரண்டாம் நாள் கூட்டம்

மத்ய சட்ட சபை மறு நாள் கூடிய போது கேள்வி நேரம் வெகு சுவாரஸ்யமாக இருந்தது. ஸ்ரீமான் கே. ஸி. நியோகியிடமிருந்து தான் பல கேள்விகளும் பிறந்தன. சமீபத்தில் டில்லியில் நடந்த கலவரங்கள் சம்பந்தமாக அவர் உள் நாட்டிலாகா மெம்பரை மடக்கி மடக்கிப் பல கேள்விகள் கேட்டார். இவை காரணமாக ஸர் மாக்ஸ்வெல் ரொம்பவும் சங்கடப்பட்டார்.

இவ்வளவு வைபவங்களுடன் ராஜீய நிலைமைபற்றிய இரண்டாம் நாள் விவாதம் ஆரம்பித்தது. அன்று பேசியவர்களில் ஸ்ரீ என். எம். ஜோஷியின் பிரசங்கம்தான் முதல் தரம். அவர் கேட்பவர் உள்ளம் தைக்கப் பேசினார். அவருடைய வாதங்கள் ஆட்சேபிக்க முடியாதவையாக இருந்தன. காங்கிரஸை அவர் பூரணமாக ஆதரித்து



சீனாவில் நேசநாடுகள் தினக்கொண்டாட்டம்

சீனாவின் தற்காலிகத் தலைநகரான சங்கிங்கில் சீனக் குடியரசு மற்றும் 27 நேசதேசங்களது கொடிகள் நேசதேச தினத்தன்று பறக்கவிடப்பட்ட காட்சி.

விடவில்லை. க்ரிப்ஸ் யோசனையைக் காங்கிரஸ் ஏற்று, மனமில்லாத ஸர்க்காரிடமிருந்து மேலும் கொஞ்சம் அதிகாரத்தைக் காங்கிரஸ் பிடுங்கியிருக்க வேண்டுமென்றார் அவர். நெருக்கடி தீர தேசிய சர்க்காரை அமைப்பது ஒன்றுதான் வழி என்று அவர் கூறினார். சமரஸம் மூலமாகவோ அன்றி மத்தியஸ்தம் மூலமாகவோ வகுப்பு ஒற்றுமை அவசியமென்றும், பிரிட்டிஷ் ஆதிக்கத்தை ஒழிப்பதற்காக முஸ்லிம்களுக்குச் சுய நிர்ணய உரிமையும் வழங்கலாமென்றும் அவர் அபிப்பிராயப்பட்டார்.

முஸ்லிம் லீகும் சுயேச்சைக்காகவே போராடுவதாக மௌலானா ஜாபர் அலி கூறினார். காங்கிரஸைக் கலக்காமல் இந்தியப் பிரச்னையைத் தீர்த்துவிடலாமென்று மிஸ்டர் சர்ச்சில் எண்ணினால், அவர் ஒரு "தமாஷான பேர்வழி" என்றும் காந்திஜி வெளியிலிருந்திருந்தால் நாசவேலையை அங்கீகரித்திருக்கமாட்டாரென்றும், பாகிஸ்தானுக்காக முஸ்லிம்கள் கடைசிவரை போராடுவரென்றும் அவர் குறிப்பிட்டார். பிரசங்கம் மொத்தத்தில் திருப்தியாக இருந்தது.

ஸர்தார் சாந்த ஸிங் கலவரங்களைச் சர்க்கார் அடக்கும் முறை சம்பந்தமாக வெகு ஆக்ரோஷத்துடன் பேசினார். சட்டசபையில் பேசக்கூடாத தோரணையிலும் சில சமயங்களில் அவர் பேசியதால் சபைத் தலைவர் அவரை அடக்க வேண்டியிருந்தது எனினும் சர்க்காரைக் கண்டிப்பதில் அவர் துளியும் சளைக்கவில்லை.

* * * *

மூன்றாம் நாள்

இந்தியா சட்டசபையின் 17-ந் தேதிக் கூட்டத்தில் ஸ்ரீமான் நியோகி ஸர்க்கார் கொள்கையைப் பலமாகக் கண்டித்தார். அவர் நாட்டில் ஏற்பட்டுள்ள அதிருப்திக்குக் காரணம் இன்னதென விளக்கினார். ஸர் கஸ்னவி அன்று மனம் விட்டுப் பேசினார். அவர் பலாத்காரச் செயல்களைப் பலமாகக் கண்டித்தாலும் நிர்மாண முறையில் ராஜ தந்திரத்துடன் அதிகாரிகள் செய்த காரியம் என்னவென்று கேட்டார். இந்தியாவிலுள்ள அனைவருக்கும் காந்திஜி பிரதிநிதியாகமாட்டார் என அவர் சொல்லும் பட்சத்தில் ஜனாப் ஜின்னா மட்டும் முஸ்லிம்கள் அனைவருக்கும் பிரதிநிதியாவரா என்றும் அவர் வினவினார். ஜனாப் ஜின்னா தங்களுக்குப் பிரதிநிதியல்லவென முஸ்லிம் ஸ்தாபனங்கள் பல கூறுவதைப்பற்றி அவர் பிரஸ்தாபித்த போது லீக் கட்சியினர் பலர் குறுக்கிட்டுஅவரைத் தடுத்தார்கள்.

ஸர்க்காருக்கு பூரண ஆதரவு அளித்தவர் ஸர் கவாஸ்ஜி ஜஹாங்கீர் தான்.

பிறகு ஐரோப்பியக் கட்சி உப தலைவர் மிஸ்டர் கிரிப்பித்ஸ் பேசுகையில் பிரிட்டிஷ் சர்க்கார் இதுவரை எந்த உறுதிமொழியை நிறைவேற்றாது போனார்கள் எனக் கேட்டது வேடிக்கையாகவிருந்தது.

* * * *

நிர்வாக சபையார் ஆதரவு

இந்தியா சட்டசபை 18-ந் தேதி கூடிய போது வைஸ்ராய் நிர்வாக சபையில் உள்ள இந்திய அங்கத்தினர்கள் மூவர் விவாதத்தில் கலந்து கொண்டனர். தற்கால ராஜீய நிலையைப் பற்றிய விவாதம் இன்றோடு முடிந்தது. ஸர் சுல்தான் ஆமத், டாக்டர் அம்பேத்கார், கனம் ஆனே ஆகிய மூவரும் பேசினார்கள். நெருக்கடியைச் சீக்கிரத்தில் தீர்த்து வைக்க முயலுபவர்களுக்கு தைரியம் பிறக்கும் வழியில் இவர்கள் ஒரு வார்த்தையும் கூறவில்லை. ஸர் மாக்ஸ்வெல் தேக அசௌக்கியம் காரணமாகக் கூட்டத்திற்கு வரவில்லை. அவரது கொள்கையைச் சகாக்கள் மூவரும் மனப்பூர்வமாக ஆதரித்தனர். ஹோம் மெம்பர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் பூரணமாகத் தாம் ஆதரிப்பதாக சட்ட மெம்பர் கூறினார்.

காங்கிரஸில் உள்ள நிதான புத்தியுடையவர்கள் சொன்ன வார்த்தையைக் காந்திஜி கேட்காமையால் உடனே தீவிர நடவடிக்கைகளை ஸர்க்கார் எடுத்துக்கொண்டதே சரியென்றும், ஒருபுறம் கோரிக்கையை வெளியிட்டுக்கொண்டு மற்றொருபுறம் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்திக்கொண்டிருக்கும் ஒரு கட்சியாருடன் எந்தக் கவர்ன்மெண்டும் சமரஸம் பேச முடியாதென்றும் ஸர் சுல்தான் ஆமத் எடுத்துச் சொன்னார். கலவரம் இன்னும் சில இடங்களில் நடந்துகொண்டிருக்கையில் நிர்மாண யோசனைகளைப் பற்றி பேசவே இடமில்லையென அவர் திட்டமாகச் சொல்லிவிட்டார்.

சட்ட மெம்பர் வெளியிட்டுச் சொல்லத் தயங்கிய சில விஷயங்களையும் டாக்டர் அம்பேத்கர் கோபத்துடன் எடுத்துச் சொன்னார் அவர் போரிடும் முறையில் தான் பேசினார். (ஸ்ரீமான் ஜோஷி 'ஆத்திரமூட்டக்கூடிய பேச்சு' என அதைக் குறிப்பிட்டார்) சென்ற இரண்டு வருஷங்களாகக் காங்கிரஸ் அஹிம்ஸைக் கொள்கையையே காற்றில் பறக்கவிட்டுவிட்டதாகவும், இந்த சட்டசபை அமைக்கப்பட்டு 9-வருஷங்களாகி விட்டதால் இதன் பிரதிநிதித்துவத் தன்மையே போய்விட்டதாகவும், ஆகவே இச்சபைக்கு நிர்வாகிகளின் காரியத்தை நிராகரிக்க ஒரு அதிகாரம் அளிப்பதுகூடாதென்றும், நிர்வாகிகள் நாட்

(அடுத்த பக்கம் பார்க்க)

விமோசனம் உண்டா?

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

எழுதியது

கண்ணிருந்தும் பாரார், காதிருந்தும் கேளார் என்று சொல்வதுண்டு. இந்தியா கவர்ன்மெண்டின் இன்றைய நிலைமைக்கு இது பொருந்தும். ஆனால் ஒரு சந்தேகம். கண்ணும் காதும் இந்தியா கவர்ன்மெண்டுக்கு உண்டோ? இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் மாண்டேகு கூறியது மக்களுக்கு ஞாபகமிருக்கும். 'இந்திய நிர்வாகம், உணர்ச்சியற்றது; மரக்கட்டைக்குச் சமானமானது' என்றார். அவரே இந்தியா மந்திரிபதவி ஏற்று உயிர் ஊட்டப் பார்த்தார். அங்கங்களில் சற்று ஆட்டம் கண்டது. உயிர் நிலையில் விசை ஏறவில்லை. ஆட்டம் அடங்கிவிட்டது. இப்பால் எவ்வளவோ மாறுதல்கள் எங்கெங்கோ ஏற்பட்டிருக்கின்றன. உலகெங்கும் புதிய சக்திகள் வட்டமிட்டுவருகின்றன. இந்தியாவிலும் அவைகளின் சாயை காணக்கிடக்கிறது. அதிகாரி வர்க்கம் அவைகளை விரும்பவில்லை; உறங்கியவர் விழித்து வருவதை வரவேற்கவில்லை. அதிகாரத்தை விட்டுக்கொடுக்க மனமில்லை.

நாயை அடிக்கப் பொல்லாப் பட்டம் கட்டுவது உண்டு. இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிக் காங்கிரஸை அடக்கி வருகின்றனர். காங்கிரஸ் செய்த பாவம் என்ன? சுயராஜ்யம் வேண்டுமென்றது; இன்றே அதிகாரம் நாட்டு மக்களுக்கு மாற வேண்டுமென்றது; நாட்டைக் காப்பாற்ற வழி அது ஒன்றுதானென்றது: பிற நாட்டைக் காக்கவும் அது அவசியமென்றது. சுயராஜ்யம் இல்லையென்று சொல்வதற்கில்லை. சுவாதீனம் எங்கும் நிலைக்கவே யுத்தம் நடக்கிறது. வாயிதா வைத்து வந்தனர். நம்பிக்கை கொள்ளவில்லை. நிலைமை முற்ற ஆரம்பித்தது. நேச தேசங்கள் கவலை காட்டின. மிஞ்சிப் போகு முன் முந்திக் கொண்டது அதிகாரி வர்க்கம்; காங்கிரஸ் மீது பாய்ந்தது; நாட்டில் கண்ட குழப்பத்திற்கும் கலவரத்திற்கும் காங்கிரஸ் தான் பொறுப்பாளி என்று சாதித்து வருகிறது. மறுத்து எது சொன்னாலும் ஏறவில்லை.

காங்கிரஸை அடக்கிவிட்டார்கள்; ஆனால், அது வெளியிட்ட கோரிக்கை அடங்கவில்லை. புது வேகமே பிறந்திருக்கிறது. அதிகாரி வர்க்கத்தின் புன்சிரிப்பில் குளிர் காய்ந்தவர்களுக்கும் உதைப்புக் கண்டிருக்கிறது. நல்ல பிள்ளைகளாக நடித்தவர்கள் நியாயம் பேசக் கிளம்பியிருக்கின்றனர். மாகாண சுயாட்சியை நடத்தி வருபவர் என்ன நினைக்கின்றனர் என்பது தெளிவு. ஹிந்து மகாசபையினர் காங்கிரஸுக்குப் பின் பாட்டுப்பாட வந்துவிட்டனர். காங்கிரஸுடன் வேற்றுமையும் விரஸமும் கொண்டாடி வந்த முஸ்லிம் லீகின் கக்ஷி என்ன? காங்கிரஸை எதிர்த்தாலும் கவர்ன்மெண்டை ஆதரிக்கவில்லை என்று சொல்லிவிட்டது. பாகிஸ்தான் உரிமையை ஒப்புக்கொண்டால் காங்கிரஸுடன் ஒத்துழைக்கவும் தயார் என்கிறது. உருப்பெற்று விசைகொண்ட கட்சிகளெல்லாம் வேண்டுவது ஒன்றுதான். அது கிட்டாத வரையில் நாட்டிலே சமாதானம் நிலைக்கவோ, வியாபாரம் செழிக்கவோ, யுத்த முயற்சி வலுக்கவோ ஹேது இல்லை என்று இந்திய வர்த்தக சம்மேளனமும் கூறி விட்டது.

அடக்குமுறை எதிர்பாராத பலன் அளித்துவிட்டது. காங்கிரஸுக்குள்ள பலத்தைக் காட்டிவிட்டது. அது கோருவது மக்கள் அனைவருடைய ஆதரவைப் பெற்றதென்பது ருஜுவாகிவிட்டது. பிற கட்சிகள் குறிப்பிட்ட இனத்தின் நன்மையைக் கோரலாம். காங்கிரஸ் எந்த இனத்திற்கும் தீங்கிழைக்காமல் எல்லோருக்கும் நன்மை நிலைக்க பாடுபடுகிறது. வித்தியாசம் அவ்வளவு தான். இடைச் சண்டையில் அடிச் சண்டையைச் சிலர் மறக்கலாம். காங்கிரஸ் மறக்கவில்லை. காங்கிரஸ் மறைந்தது மறந்தவருக்கு ஞாபகமூட்டவே உதவிற்று. இதற்கு விமோசனம் என்ன? பிரிட்டிஷ் பொதுமக்கள் உண்மையை அறிவார்களானால் முடிவுகட்டத் தாமதம் இராது. அவர்களிடையே மனமாற்றம் முதிர்ந்துவிட்டதாகவே பலர் கூறுகின்றனர். ஆக்கிரமிப்பில் ஆசை இல்லை; அடக்கியாள மனம் இல்லை என்று சொல்லப்படுகிறது. எனவே, பிள்ளையார் கொடுக்கும் வரனைப் பூசாரி மறுக்காமல் பார்க்கவேண்டும். உண்மையை உணர்த்த வழி காணவேண்டும். நாட்டு மக்கள் ஒன்றுபட்டாலும் கைமேல் பலன் கிட்டுவது கஷ்டம். ஒருவேளை நேசதேசங்கள் குறுக்கிட்டால் உதவக்கூடும். லக்ஷியத்தைக் காப்பாற்றவும் யுத்தத்தில் எளிதில் வெற்றி காணவும் குறுக்கிடுவது பொருந்தும். குறுக்கிடுவார்களா?

சென்றவார நிகழ்ச்சிகள்

(முன் பக்கத் தொடர்ச்சி)

டின் பாதுகாப்பையும் அமைதியையும் கருதியே தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிறகு பேசிய மிஸ்டர் ஹுஸேன்பாய் லால்ஜி, ஜனாப் லியாகத் அலிகான், ஸ்ரீமான் பானர்ஜி முதலியவர்கள் டாக்டர் அம்பேத்கர் சட்டசபைக்குப் பிரதிநிதித்துவத் தன்மை இல்லையென்று கூறியதைப் பலமாகக் கண்டித்து அவரது வாதத்தைப் பிய்த்தெறிந்தார்கள். "இந்த சபையைத்தான் கலைத்துவிடும்படி பலதடவை கேட்கிறோமே ஏன் கலைக்கக் கூடாது?" என ஒருவர் கேட்டார்.

ஜனாப் ஜின்னா இதுவரை கூட்டத்திற்கு வரவே இல்லை. அவரது காரியதரிசியான ஜனாப் லியாகத் அலி கான் அவரது கருத்தை எடுத்துச் சொன்னார். காங்கிரஸ் கோரிக்கையில் சமரஸத்துக்கு இடம் எங்கே இருக்கிறது என அவர் கேட்டார். கனம் ஆனே விவாதத்தை முடிக்கையில் ஸ்ரீ நியோகி குறிப்பிட்ட சில விஷயங்களுக்குப் பதிலளிப்பதிலேயே பெருங்காலம் போக்கினார். டாக்டர் அம்பேத்கர் முன்பின் பாராமல் பேசியதற்கும் அவர் சமாதானம் கூறினார். கடைசியாக அவர் ஒரு விஷயத்தை ஒப்புக்கொண்டார். வைஸ்ராயைக் காண காந்திஜியை அனுமதிக்காமலே அவரையும் மற்றவர்களையும் கைதி செய்தது சரியா என்று தமக்கு ஆதியில் சந்தேகம் இருந்ததாயினும் இப்போது ஸர்க்கார் செய்த காரியமே சரியென்ற முடிவுக்கு வந்திருப்பதாக ஒப்புக்கொண்டார். அவரது பிரசங்கம் மனச்சோர்வையும் ஏமாற்றத்தையும் அளித்துவிட்டது. அந்த மட்டில் இந்த விவாதத்தில் ஒரு ஆறுதல் ஏற்பட்டிருக்கிறது. முஸ்லீம் மெம்பர்கள் பலரும் ஸர்க்கார் கொள்கை சம்பந்தமாக அதிருப்தியை வெளியிட்டது அதிகாரிகளுக்கே சற்று ஆச்சரியத்தை உண்டுபண்ணியிருக்கும். தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் மட்டுமின்றி நியமன அங்கத்தினர்களும் கூட அவ்வித அபிப்பிராயத்தையே வெளியிட்டார்கள்.

* * * *

காந்திஜியைக் காண அனுமதியில்லை

தற்போதைய நிலைமை பற்றி விவாதிப்பதற்காக மகாத்மா காந்தியையும், பாதுகாப்பிலுள்ள இதர காங்கிரஸ் தலைவர்களையும் காண அனுமதி தரும்படி ஹிந்து மகாசபைக் கமிட்டியினர் வைஸ்ராய்க்கு எழுதியிருந்தனர். அனுமதியளிக்க வைஸ்ராய் மறுத்து விட்டதாக இப்போது தெரிகிறது.

* * * *

ராஜாஜி பதில்

எர்ஸ்கின் பிரபு லண்டன் "டைம்ஸ்" பத்திரிகைக்கு எழுதிய கடிதம் சம்பந்தமாக ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் ஒரு அறிக்கையை விடுத்திருக்கிறார்:—

சென்னையில மந்திரி சபை ஏற்படுத்தும் விஷயத்தில் காந்திஜி குறுக்கிட்டதாக எர்ஸ்கின் பிரபு கூறும் விவரம் விசித்திரமாயிருக்கிறது. ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் தமது பேச்சு வார்த்தைகள் முறிந்துபோனது பற்றி கூறிய விவரம் எப்படி ஆதாரமற்றதாயிருக்கிறதோ அதேபோலத்தான் எர்ஸ்கின் பிரபுகூற்றும் இருக்கிறது. பொறுப்புள்ளவர்கள் தங்களுடைய ஊக்கத்தின்பேரில் இந்தமாதிரியெல்லாம் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து, கதைகளை ஒன்றன்பின்னாகப் பிணைக்க முயல்வது வருந்தத்தக்கதாகும். குற்றம் சுமத்தும் இந்த இரண்டு பிரமுகர்களும் எதை ஆதாரமாகக் கொண்டு குற்றம் கூறுகிறார்கள் என்பதை நமக்குத் தெரிவிக்கவில்லை. தெரிந்தால் நாம் இந்தக் கட்டுக் கதைகளைப்பற்றிய

(14-ம் பக்கம் பார்க்க)

தள்ளிவிட்டுத் தானும் ஏறிக்கொண்டார் ஒரு ஆஸாமி. ரயிலும் கிளம்பிவிட்டது.

வந்தவர் என்னைப் பார்த்து "என்னங்கோ, நீங்க வக்கிலு இல்லீங்கோ!" என்று கேட்டார்.

"அட ராமா" என்று நினைத்துக்கொண்டே. காது கேட்காதது போல சும்மா இருந்தேன்.

மறுபடியும் அந்த மனுஷ்யர், "என்னுங்கோ, நீங்க சுப்பய்யரு மருமவப்பிள்ளே இல்லிங்கோ" என்று சொல்லிக்கொண்டே எதிரே வந்து உட்கார்ந்தார்.

நான், "ஆமாம்! ஆமாம்?" நீங்க எந்த ஊர்? என்று கேட்டேன்.

"நாம்போ இருக்கறது வேலூர் கிட்ட. ஒரு கேசு இருந்துச்சு ஐகோர்டுலே. வந்தெனுங்கோ: ஆனு வாய்தா ஆய்ப்பூடுச்சு என்னுங்கோ, அந்த புது ஜட்ஜி வந்துகிருரே அவரு எப்படிங்க?" என்று ஆரம்பித்து விட்டார். என் தூக்கத்திலே இடி விழுந்தது! காட்பாடி போகிறவரைக்கும் வாய் ஓயாது பேசினுர். தன் குடும்ப விஷயங்களையெல்லாம் பற்றி யோசனை கேட்டார். காட்பாடியிலே மனதில்லாமல் இறங்கிபபோய்ச்சேர்ந்தார். நான் உடனே காதையும் கண்களையும் இறுகப் பொத்திக்கொண்டு காலிலிருந்து தலை வரைக்கும் போத்திக்கொண்டு, கதவைச் சாத்தி போட்டு படுத்துக்கொண்டு குறட்டை விட ஆரமபிச்சேன். காலங்கார்த்தாலே கோயமுத்தூர் ஸ்டேஷனில் கண் முழித்தேன்.

மலைக்காற்று 'குளு குளு'ன்னு சுகமா வீசிற்று. ஆனந்தமாய் இரண்டு கொட்டாவி விட்டேன். கோர்ட்டு...சே! அந்த ஞாபகமே கூடாது. ஆறு வாரத்துக்கு அடியோட மறந்து விடணும்...கோர்ட்டு, ஜட்ஜுகள், கட்சிக் காரன்-எல்லாரையும் காக்கா தூக்கிக்கொண்டுபோய் காவேரியிலே போட்டு விட்டதென்று நினைத்துக்கொள்ளணும் என்று சங்கல்பம் பண்ணிக்கொண்டேன். காலாற கொஞ்சம் ப்ளாட்பாரம் மேலே உலாத்தலாமென்று இறங்கினேன். நாலடி எடுத்து வைத்தேன். ஒரு ஆஸாமி—முன்னே பின்னே பார்த்ததில்லை—எதரே வந்து நின்று கொண்டு, "ஏன் ஸார், ஹைகோர்ட்டு சாத்தியாச்சான்னு?"—என்று கேட்டார்.

"ஆமாம்" என்று சொல்லிட்டு தப்பிப்போவதற்குள் இன்னும் நாலு பேர் வந்து சூழ்ந்து கொண்டனர்.

"எத்தனை வாரம் லீவ் ஸார்?" என்ருர் ஒருவர்.

"நானூறு" என்றேன்.

"ஜஸ்டிஸ் கோரோஜனம் கோயமுத்தூருக்கு வராரா? எங்கே போகப் போருர்? ஸார்?". என்று கேட்டார் இன்னுெருத்தர்.

"அந்தமானுக்கு"ன்னு பதில் சொன்னேன்..

"ஏன ஸார், பாரிஸ்டர் பகாசூரன் அவர் வீட்டிலேதானே இருக்கார்?" என்று கேட்டார் ஒருத்தர்.

"இலலே ஸார்! அண்டையாத்துக்காரன் அடுப்பங்கரை உள்ளே" என்று சொல்லிவிட்டு ஓடிப் போய்த் திரும்பி ரயிலிலே ஏறிக் கதவைச் சாத்தி தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு படுத்து விட்டேன்.

பத்து மணிக்கு, குன்னூருக்குப் போய்ச் சேர்ந்து, நல்ல காட்டுக்கருகே ஒரு தனி பங்களாவிலே இறங்கினேன். மனஸுக்கு ஒருவித திருப்தி வந்தது. இங்கேயாவது தொந்தரவு இல்லாமல் இருக்கலாம் என்று கொஞ்சம் மனஸைத் தேற்றினேன். நாள் முழுதும் வெளியிலே போகாமல் இருந்தேன். ராத்திரி நிம்மதியாத் தூங்கினேன்.

மறு நாள் காலை எழுந்து, "வாக்" போனேன். அடாடா! என்ன குளுமை! என்ன உத்ஸாகம் உண்டாக்கும் நல்ல காற்று! பேஷ்...அந்த எழவெடுத்த கோர்ட்டு...சே! சே!! அதை யேன் நினைக்கணும்? வேறு எதையாவது மனஸுக்கு இனிமையானதாக நினைக்கலாம் என்று யோசிக்க ஆரம்பித்தேன்.

கண்ணைத் திறந்துகொண்டே போய்,எதிரே வந்துகொண்டிருந்தவர் மேலே முட்டிக்கொண்டேன். அவர் ஏற இறங்கப் பார்த்தார்.

நான் "ரொம்ப ஸாரி! எக்ஸ்க்யூஸ் பண்ணிக்கணும்." என்று பல்லை இளிச்சேன்.

அவர், 'சரிதான் ஸார்! பாதகமில்லெ. அது போகட்டும். நீங்க நேத்து தான் வந்திகளோ?" என்று கேட்டார்.

"ஆமாம் ஸார்" என்றேன்.

"எஙகே மெட்ராஸ் லேந்தா?" என்று கேட்டார்.

தலையை 'ஆமாம்' என்று ஆட்டினேன்.

"அங்கே என்ன? வியாபாரமோ?" என்று கேட்டார்.

'இல்லே ஸார். வக்கீல்...லாயர்' என்றேன்.

"அடாடாடாடாடா...பேஷ்! கையைக் கொடுங்கோ" என்று கத்திண்டு என் கையைப் பிடிச்சுக் கசக்க ஆரம்பித்தார். "நானும் அதே தொழிலதான். பாபிசெட்டிபாளையத்துலெ ப்ராக்டிஸ் பண்றேன் என் பேர் கறுங்கல் ராவ்...ரொம்ப ஸந்தோஷம். ஏன் ஸார் இப்போ ஹைகோர்ட்டுலெ பயில் (file) என்னமா இருக்கு? ரொம்ப..." என்று இழுத்தார்.

நான், பல்லைக் கடித்துக்கொண்டு, "தேஞ்சு போச்சு... அதாம் கொறைஞ்சு போச்சு" என்று பதில் சொன்னேன்.

அவர் "ஏன் ஸார்? பல்லைக் கடிக்கிறிங்க? ஏதானு..." என்று சொல்லிக் கொணடிருக்கையில, சொல்லாமல் திருமபி வந்த வழியே நடக்க ஆரம்பித்தேன்.

நான் கிளம்பின வேகத்தைப் பார்த்து அவர் அங்கேயே நின்றுவிட்டார். சே! சே! சே! காலங்கார்த்தாலே எவ்வளவு குஷாலா இருந்தது! குட்டிச்சுவரா அடிச்சூட்டான் கொரங்கு ராயன், சனியன்! சனியன்!' என்று திட்டிக்கொண்டே வீடு வந்து சேர்ந்தேன்.

வீட்டு வாசலிலே இரண்டு பேர் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். என்னைப் பார்த்ததும் எழுந்து நின்றனர். அதில் ஒருத்தர், "நீங்கதானே..." என்று கேட்டார்.

"ஆமாம்" என்றேன்.

மற்றவர், 'ரொம்ப ஸந்தோஷம், நான் சொன்னேனே இல்லேபோ! நீங்க நேத்திக்கி ரயிலிலேந்து எறங்கச்சேயே சொன்னேன்."

"ஆமாம் நீங்க யாரு?" என்று கேட்டேன். "நாங்க இந்த ஊரிலே இருக்கறவா, இவர்தான் பசியேப்ப கவுண்டர். பஞ்சாயத் மெம்பர், நான் இவருக்கு ரொம்ப ஸ்நேகிதம். ஒங்களுக்கு எல்லாம் ஸௌக்கியமா இருக்குதா?" என்று கேட்டார்.

நான, "ரொம்ப தாங்க்ஸ், ஒன்னும் கொறவில்லே. எங்கே இவ்வளவு தூரம்?" என்று கேட்டேன்.

அதற்கு அவர், "அதெல்லாம் ஒன்றுமே இல்லே. சும்மாப்பாத்துட்டு போலாம்னு வந்தோம். ஒன்னும் விசேஷமில்லே." என்று ஆரம்பித்தார்.

மற்றவர், "ஆமா, ஆமா, என்ன விசேஷம்? சும்மா இப படி ஏன் ஸார்? பட்டணத்துலே யார் பெரிய வக்கீல். எனக்கு ஐகோர்ட்லே......"

எனக்குக் கண்ணிலே நெருப்புப் பொறி பறக்க ஆரம்பித்தது. உடனே பரபரவென்று, "பட்டணத்திலே வக்கீலெல்லாம் செத்துப் பூட்டாளாம். ஐகோர்ட்டை எங்கேயோ காகா தூக்கிண்டு போயிட்டுதாம். ஜட்ஜுகளெல்லாம் வெத்தலே பாக்கு கடை வெச்சிருக்காளாம்...போங்கய்யா? போங்கோ?" என்று கத்திண்டு கதவை 'டமால்' என்று அறைந்து சாத்திவிட்டு உள்ளே வந்துட்டேன்.

போஸ்டு வந்தது. இரண்டே கடுதாசிகள். ஒன்று ஹைகோர்ட்டிலே ஆபீஸ் ரூமுக்த் அந்த மாதத்து 'குடிக்கூலியை இரண்டு நாளைக்குள்ளே கட்டணம் என்று நோட்டீஸ். இரண்டாவது அக்கிரமபாளையம் அழுக்கன் செட்டியார் எழுதியது. அதிலே "வக்கீலய்யாவுகு... நீங்க பீஸ் விஷயமாக எழுதினது கிடைச்சுது. இப்பதான் கோர்ட்டு சாத்தடுவாகளேன்னு அனுப்பிவைக்கலே மேலும் இப்போ சொணக்கம். லீவு களிச்சு தெறந்த கோர்ட்டுலே பீசும் கையுமா வரேன்னு தெரிவிச்சுக்கிறேன்." என்று எழுதியிருந்தது.

ரொம்ப காரியமா, என் குமாஸ்தா-ஸர்வ மடையன்—இந்த இரண்டையும் அட்ரஸ் மாற்றி எழுதி அனுப்பியிருந்தான்... ஆயிரம் சுக்கலாய்க் கிழித்து எறிந்தேன் அன்றைக்கு ராத்திரியே யாருக்கும் சொலலாமல் ஸ்பெஷல் மோட்டார் வைத்துக்கொண்டு ஊடி (Ooty) க்குப் போய்ச் சேர்ந்தேன். ராத்திரி 'ஜிலு ஜிலு' என்று அந்தக் குளிரிலே "கம"னுப் போர்த்திக்கொண்டு ஆனந்தமாய்த் தூங்கினேன்.

மறுநாள் காலை எழுந்து ஸ்நானம் பண்ணி விட்டு, ட்ரெஸ் பண்ணிக்கொண்டு கார்டன்ஸ், சாரிங்க்ராஸ், எல்க்ஹில் எல்லாம் நடந்து விட்டு "ஜாலி இன்ஸ்டிட்யூட்"லே ஒரு கப் காப்பி சாப்பிடலாம்னு வந்து சேர்ந்தேன் நடந்து போகச்சே வழியில் தெரிந்தவர் ஒரு பதினைந்து இருபது பேரைப் பார்த்தேன்...அத்தனை பேரும் சங்கேதமாப பேசிண்டு வந்தவா மாதிரி, ஒன்றுகூட விடாமல் ஆறு கேள்விகளைக் கேட்டார்கள்.

"எப்போ வந்தே?"

"எங்கே இருக்கே?"

"எத்தனை நாள் இருப்பே?"

"பட்டணத்துலெ வெயில் ஜாஸ்தியா?"

"கோர்ட்டு எப்போ தெறக்கரு?"

"அடுத்த ஜட்ஜு வேலை யாருக்கு ஆகப்போறது?"

முதல் இரண்டு பேருக்கு ரொம்ப பொறுமையாய் எல்லாவற்றுக்கும் பதில் சொன்னேன். அடுத்த இரண்டு பேருக்கு நாலு கேள்விகளுக்குப் பதில் சொன்னேன். மற்றவர்களை 'கன்னு, பின்னு' என்று திட்டி, அடித்து விரட்டிவிட்டு வந்தேன்.

சுடச்சுட காப்பி வந்தது! அதை ஆற்றிச் சாப்பிடுவதற்குள்ளே. ஆறு பேர் வந்து அதே ஆறு கேள்விகளைக் கேட்டனர். சாப்பிட வைத்திருந்த காபியை அவா மேலே கொட்டிவிட்டு, நேராய் வீட்டுக்கு ஓடிப் போய், ஒரு சின்ன ரூமில் கதவைச் சாத்திப் போட்டுவிட்டு உட்கார்ந்துண்டு யோசனை பண்ண ஆரம்பிச்சேன். வீட்டுக்கு ஓடிவரும்போது ஒரு பத்திரிகை நிருபர் அவசரமாக நிறுத்தி, "என்ன ஸார்? ஜில்லா ஜட்ஜ் வேலைக்கு ட்ரை பண்ண வந்தாப்பலெ இருக்கு எப்படி இருக்கு சான்ஸ்?" என்று கேட்டுவிட்டு ஒரு அறையை வாங்கிக் கொண்டார்.

ரொம்பதூரம் யோசனை பண்ணி, கடைசியில் புத்தி ஸ்வாதீனம் இல்லாதவன் மாதிரி பாசாங்கு செய்யத் தீர்மானம் பண்ணினேன். அதற்குள்ளே எனக்கு ரொம்ப நெருங்கின ஸ்நேகிதனை குஞ்சுண்ணி வந்து சேர்ந்தான். என் கஷ்டத்தை யெல்லாம் நாலு மணி நேரம் சொன்னேன் அவனுக்கு.

அவனும் ஒரு நிமிஷத்துக்கு ஒரு தரம் தவருமல், "ஓ, ஓ" என்று சொல்லிக் கொண்டே வந்தான.

"ஆகையினலே பாத்தயா குஞ்சுண்ணி. எனக்கு இந்த யோசனை பொறந்தது. கோர்ட்டு பேரையாவது, வக்கீல் தொழில் சம்பந்தமாகவாவது யாராவது பேச்சு வந்து எடுத்தா, எனக்குப் பொறுக்க முடியாத கோவம் வந்துடறது. அதனலே புத்தி மாருட்டம்னு பாசாங்கு பண்ணு, ஒருத்தரும் அந்த பேச்சே எடுக்கமாட்டா...இன்னொரு தரம் யாராவது அந்த வார்த்தை ஏடுத்தா நிச்சயமா அவாளை அடிச்சு கொன்னுடுவேன், அவ்வளவு தான்" என்று சொன்னேன்.

"ஓ ரொம்ப ஸரி." என்று சொல்லிப் பூரணமாக ஆமோதித்துவிட்டு, இரண்டு நிமிஷத்

(18-ம் பக்கம் பார்க்க)

சீவக சிந்தாமணி-14.



பதுமையைப் பாம்பு கடித்தது

★

—வ. வேணுகோபாலன் எழுதியது—

★

சந்திராப நகரத்தின் சோலையில் நாட்டியம் முதலியவற்றைக் கண்டு, சீவகனும் உலோகபாலனும் இனிதாகப் பொழுது போக்கி இருந்தனர். இருவரும் மனங்கலந்து பேசிக்கொண்டிருக்கையில் ஒரு வீரன் அவர்கள் முன்பு ஓடி வந்து வணங்கினுன். உலோகபாலன் வியப்புடன் வீரனுடைய முகத்தை ஏறிட்டுப் பார்த்தான்.

"ராஜபுத்ர! பதுமையைப் பாம்பு கடித்துவிட்டது!" என்று நடுநடுங்கிக்கொண்டே அந்த வீரன் சொன்னுன். உடனே உலோகபாலன் துணுக்குற்று எழுந்தான். இடி விழுந்தாற் போன்றிருந்தது அவ்வீரன் கூறிய மொழி. கவலையும் துக்கமும் உலோகபாலன் மனத்தே குடிகொண்டன.

"நண்ப! நீ இவ்விடத்தில் இரு. நான் வந்து விடுகிறேன்" என்று கூறி உலோகபாலன் அரண்மனைக்குப் புறப்பட்டான். சிறிது தூரம் நடந்து சென்றதும், "பதுமையைப் பாம்பு கடித்தது ஏன்?" என்று அந்த வீரனிடம் கேட்டான். உடனே அவ்வீரன் மறுமொழி கூறலானுன்.

"வேந்தே! கன்னிமாடத்திற்கு அருகில் உள்ள சோலையில் முல்லைக்கொடியையும், கருப்பூரச் செடியையும் பதுமை வளர்த்து வந்தாள். அவை நன்ருக வளர்ந்தன. ஒரு நாள், முல்லைக்கொடியில் பல அரும்புகள் தோன்றின. அந்தச் செய்தியைப் பதுமைக்குச் சில சேடியர் கூறினர். அதைப் பார்ப்பதற்கு உடனே பதுமை ஓடினுள். ஓடும் வழியில் ஒரு குராமரம் நிறையப் பூக்களைப் பூத்து ஒரு பெண்ணைப்போல விளங்கியது. குரா மரத்தினைக் கண்ட பதுமைக்கு அதிலுள்ள பூக்களைப் பறிப்பதற்கு ஆசை உண்டாயிற்று. 'இக்குரவம்பாவை என் தோழி' என்றுகூறி அம்மரத்தில் உள்ள பூக்களைப் பறிப்பதற்குக் கையை நீட்டினுள். அம்மரத்தின் கிளையைத் தழுவிக்கொண்டிருந்த குக்குட சர்ப்பம், பதுமை நீட்டிய கையைக் கடித்துவிட்டது, உடனே பதுமை பயந்து நடுங்கி, 'அம்மேயோ!' என்று கூறினுள். அதைக் கேட்டு பதுமையின் தாய் வந்துவிட்டாளோ என்று எண்ணிய சேடி, பதுமையிருக்குமிடம் ஓடி 'திலோத்தமையம்மை வந்தாரோ' என்று கேட்டாள். பதுமை, சோர்வுடன், 'சேடி! என்னைப் பாம்பு கடித்துவிட்டது. என் தந்தை தனபதியையும், என் தமையன் உலோகபாலனையும் எனக்காக வணங்குக. என் தாய் திலோத்தமையையும் பிறரையும் தழுவிக்கொள். என்னை நாள்தோறு நினைத்திரு' என்று கூறி அவளைத் தழுவிக்கொண்டே கீழே வீழ்ந்தாள்."

இவ்வாறு வீரன் மொழிந்ததைக் கேட்டுக்கொண்டே உலோகபாலன் வேகமாக நடந்துசென்ருன். அரண்மனைக்குள் சென்று பதுமை மயங்கிக் கிடப்பதைக் கண்டான். தான் கற்ற மந்திரங்களையும், மருந்துகளையும் உபயோகித்தான் சிறிதும் குணமாகவில்லை. சிறந்த வைத்தியர்களாலும் மாந்திரீகர்களாலும் விஷத்தை நீக்க முடியவில்லை. உலோகபாலன் மிக மனம் வருந்திஞன். உடனே ஒரு முடிவு செய்து, "பதுமையைப் பாம்பு கடித்தது, விஷத்தை நீக்கியவர்களுக்குத் தனபதி அரசன், நாட்டில் ஒரு பகுதியையும், நிதியையும் தந்து பதுமையையும் மணம் புரிவிப்பான். விஷத்தைத் தீர்த்து அவற்றைப் பெற்றுக்கொள்க" என்று கூறி நகரத்தினர்க்கு முரசறைவித்தான். முரசறைவித்த பின்னர் வைத்தியர் பலரும், மந்திரம் வல்லவர் பலரும் வந்து விஷத்தை நீக்க முயன்றனர்,

"சிதமண்டலி கடித்துவிட்டது" என்ருர் சிலர்.

"கருவழலை கடித்து விட்டது. பிழைப்பது அரிது" என்ருர் சிலர்.

"நாகம் கடித்தமையால் இனி உயிர் வாழாள்" என்று சிலர் கூறினர்.

"இரத்தம் சோர்ந்து விட்டது இனி உயிர் மீளாது. அவ்வளவு தான்" என்று பலர் தைரியமாக மொழிந்தனர். மந்திரம்வல்ல அந்தணர் பலவாறு முயன்றும் பதுமைக்கு மயக்கம் தெளியவில்லை. பின்னர் சோதிடரில் சிறந்த ஒருவன் ஆராய்ந்து பார்த்து "வேந்தே! ஒரு விஷயம், பாம்பு உதிக்கின்ற நாளில் பாம்பு கடித்தால் இறைவனுலும் விஷத்தை அகற்ற முடியாது. ஆனுல் பதுமைக்குப் பாம்பு கடித்த நாள், பாம்பு உதித்த நாள் அன்று; ஆதலால் இவள் எவ்விதமேனும் உயிர் பெற்றெழுவாள்; இங்கு தோன்றுகின்ற பல நன்னிமித்தத்தால் இத்துன்பத்தைத் தீர்க்க ஓர் வீரன் இந்நாட்டிற்கு வந்துள்ளான்" என்று கூறினுன்.

சோதிடன் வார்த்தையைக் கேட்டு உலோகபாலன் ஆச்சரிய முற்ருன். வருத்தத்துடனிருந்த அவன் முகம் மலர்ச்சி பெற்றது. பக்கத்திலிருந்த தூணில் கையைத் தட்டி, எழுந்து நின்று ஒரு வீரனைக் கூப்பிட்டான். அவன் முன் அவ்வீரன் வந்தான்.

"அடே! சோலையில் என்னுடன் இருந்த வீரனை இங்கு அழைத்து வா!" என்று கட்டளையிட்டான். அந்த வீரன் விரைவாகச் சென்று சீவகனிடம் அரசிளங்குமரனுடைய கட்டளையைத் தெரிவித்தான். வேருென்றும் எண்ணுமல் விரைவாக உலோகபாலனிருக்குமிடம் சீவகன் வந்து சேர்ந்தான். கீழே ஓர் மங்கை மயங்கிப் படுத்திருப்பதையும், அவளைச் சுற்றி மகளிரும் ஆடவரும் சோகத்துடன் நின்றிருப்பதையும் கண்டு "இது என்ன கொடுமை!" என்ருன்,

"நண்ப! எம்மால் நீ பெரும் புகழ் பெறுவாய். இம்மங்கை என் உடன் பிறந்தவளான பதுமை என்பாள். இவளைக் குக்குட சர்ப்பம் கடித்து விட்டது. நீ இவளுயிரைக் காப்பாற்றவேண்டும்." என்று உலோகபாலன் கூறினுன். சீவகன் புன்முறுவலுடன் உலோகபாலனை தழுவிக் கொண்டான். அங்கு வருந்தி நிற்பவர்களுக்கெல்லாம் ஆறுதல் கூறினுன். மீண்டும் அவளை நோக்கி, "அன்ப! நீ வருந்தாதே யாரும் வருந்த வேண்டா! எத்தகைய பாம்பு கடித்திருந்தாலும் இடையூறு செய்ததற்குத் தேவர் செய்த தீவினையாயிருந்தாலும் இவளுக்கு சாவு இல்லை" என்று சிரித்துக் கொண்டே மொழிந்தான்.

பதுமையின் ரூபலாவண்யத்தைப் பார்த்த சீவகன் அதிசயம் அடைந்தான். இம்மங்கையின் நிறைந்த அழகைப்பொறுமையுடன் தடையில்லாமல் கண்களாற் காணும் பேறு கிடைத்ததே' என்று மனமகிழ்ந்தான். பதுமையின் கையில் பாம்பு கடித்த இடத்தைப் பார்த்துக் கோழி போல் பறக்கும் வன்மையுள்ள குக்குட சர்ப்பம் பதுமையைக் கடித்தது என்பதை உணர்ந்தான். பாம்புகளின் வகையையும் அவைகளின் தன்மையையும் உலோக பாலன் முதலியவர்க்கு விளங்கச் சொன்னுன். ஓர் குவளை மலரை எடுத்

துச் சுதஞ்சணன் கூறிய மந்திரத்தை மூன்று உரு ஓதி பதுமையின் கூந்தலில் செருகினன், பின்னும், இரண்டு உரு ஓதி பதுமையின் மேனியை உற்று நோக்கித் தியானித்தான். உடனே சூரியனைக் கண்ட பனிபோல் விஷம் பதுமையின் மேனியை விட்டு அகன்றது. உறக்கம் நீங்கியவள்போல் பதுமை கண் விழித்தாள், சீவகன் பதுமைக்கு அருகில் உட்கார்ந்து அவள் முகத்தை ஆவலுடன் நோக்கியிருந்தான். கண் விழித்த பதுமை சீவகன் அழகைக் கண்டு பருகி விடுவாள் போலப் பார்த்தாள். இருவர் நோக்கும் ஒன்று பட்டு மயங்கின. சீவகன் மீது கொண்ட காதலால் மீண்டும் பெருமூச்சு விட்டு மயக்கமடைந்தாள் பதுமை. சீவகனிடத்து வேட்கை கொண்டே பதுமை மயக்கமுற்ருள் என்று உணர்ந்த அவள் தாயும் சேடியரும், வருத்தமும் சந்தோஷமும் ஒருங்கே கொண்டனர். "ஐய! உன் கையால் இவளைத் தொடுவாயானல் இவள் மயக்கம் நீங்குவாள்" என்று சீவகனிடம் அவர்கள் மொழிந்தனர். 'காதலித்தோரைக் கண்டாலும், அவர்கள் மொழியைக் கேட்டாலும், அவரைத் தொட்டாலும் சோர்வு நீங்கி அவர்க்கு உயிர் நிலைத்து நிற்கும்' என்பதை உணர்ந்த சீவகன், பதுமையின் மேனியைச் சந்தனம் பூசினற்போல் குளிரும்படித் தடவினன். உடனே பதுமை நாணங் கொண்டு உடல் கூசி எழுந்து ஒதுங்கி நின்ருள்.

பதுமை உயிர்பெற்று எழுந்ததைக் கண்டு யாவரும்மன மகிழ்ந்தனர்.

"இந்தக்குமரன், வித்தியாதரனே!" என்று பலர் புகழ்ந்தனர். "தேவ குமரனே" என்று பலர் சொல்லினர், "போன உயிரை மீட்டுவிட்டானே!" என்று பலர் வியந்தனர். "அரசன், இவனுக்கே பதுமையைக் கொடுப்பான்" என்று கூறினர் பலர். "மன்மதனுகிய இவனே பதுமைக்குக் காதலன்" என்று பலர் மொழிந்தனர். பதுமையின் தந்தை தனபதிக்கு அளவில்லாத மகிழ்ச்சி உண்டாயிற்று. சீவகனை மார்புறத் தழுவிக்கொண்டான். தன் இருப்பிடத்திற்கு அழைத்துச் சென்று சீவகனை உபசரித்து மகிழ்வித்தான். சீவகன் தனபதிக்குத்தான் கற்ற கலைகளையெல்லாம் மொழிந்தான். சீவகனுடைய கல்வித் திறமையைத் தனபதி புகழ்ந்தான். சூரியாஸ்தமனம் ஆனவுடன், சீவகன் உறங்குவதற்குச் சென்ருன்.

பதுமையின் அழகாலும், அவள் தன்னை நோக்கிய நோக்கத்தாலும் அவள் மீது காதல் கொண்ட சீவகன் அன்றிரவு உறங்காமல் வருந்தியிருந்தான். சீவகனைக் கண்டது முதல், அவனைக் கணவனுக அடையவேண்டும்' என்று எண்ணிய பதுமையும் அன்றிரவு உறங்காமல் வருந்தியிருந்தாள். உண்மைக் காதலராகிய இருவரும் ஒரே சமயத்தில் ஒருவரை ஒருவர் நினைந்து வருந்தினர். சீவகனிடம் காதல் கொள்வதற்குக் காரணமாக இருந்த இடம் பாம்பு கடித்த சோலையே ஆதலால் அங்கு சென்று தன் வருத்தத்தைப் போக்கிக் கொள்ள எண்ணினுள்.' 'உடனே விடியற் காலத்திருளில் தனியே அவ்விடத்திற்குச் சென்ருள். சீவகனும் பதுமையை நினைந்து பாம்பு கடித்த சோலைக்குச் சென்ருன். எதிர்பாராவிதமாய் இருவரும் சந்தித்தனர். உள்ளம் மகிழ இருவரும் ஒன்று கூடி இன்பமெய்தினர். அச்சமயம் மகளிர் பலர் அவ்வழியே வந்தவுடன் இருவரும் ஓடி தனித்தனியே அவரவர் இருப்பிடத்தை அடைந்தனர்.

சீவகனும் பதுமையும் காதல் கொண்டுள்ளதைக் குறிப்பால் தனபதி அறிந்து கொண்டான். அதைப்பற்றி ஓர் முடிவு செய்துவிடலாமென்று எண்ணி மதிதரன் என்னும் மந்திரியை அழைத்தான்.

"மதிதரா! சீவகன், பதுமையின் உயிரை மீட்டவன்; அழகு மிக்கவன். உலகத்தை ஆளும் அரசர்க்குரிய லக்ஷணங்கள் அவனிடம் அமைந்துள்ளன. அவன் உடன்படுவானுனல் பதுமையை அவனுக்கு மணம் புரிவிக்கலாம்" என்ருன்.

"வேந்தே! உருவத்தாலும் ஒப்புமையாலும் சீவகனுக்குத் தக்கவளே பதுமையும்" என்ருன் மதிதரன்.

"மதிதரா! சீவகனிடம் சென்று என் எண்ணத்தை அறிவித்து அவன் உடன்பாட்டையும் தெரிந்து வா" என்று அரசன் கூறினுன்.

மதிதரன், சீவகனிருந்த மாளிகையை அடைந்து தனியே அழைத்து அரசன் எண்ணத்தை அவனுக்கு உரைத்தான்.

"அரசன் விரும்பியபடியே ஆகுக!" என்று தன் உடன்பாட்டைச் சீவகன் மொழிந்தான். மதிதரன் தனபதியிடம் சீவகன் உடன்பாட்டைக் கூறினுன். மதிதரன், உலோகபாலன், திலோத்தமை மூவரும் ஒன்று கூடி ஆலோசித்து. "அழகில் மிக்க சீவகன், பதுமையின் கூந்தலைத் தொட்டுப் பூவைச் சூடினுன்; அவள் உடலைத் தொட்டு மயக்கத்தை அகற்றினுன்; மந்திரம் ஓதி உயிரை மீட்டான்; 'உற்ருர்க் குரியர் பொற்ருெடி மகளிர்' ஆதலால் சீவகனுக்குப் பதுமையை வாழ்க்கைப் படுத்துவதே சிறந்தது" என்று கூறி நிச்சயம் செய்தனர்.

தனபதியின் கட்டளைப்படி மணம் செய்தற்கு வேண்டிய காரியங்கள் ஏற்பாடாயின. புதியதாக மண்டபமொன்று செய்யப்பட்டது. அலங்காரம் செய்த அம்மண்டபத்தில் பதுமைக்கும் சீவகனுக்கும் கலியாணம் நிகழ்ந்தது. காதலரிருவரும் உள்ளன்பு மிக்கவராய் இன்பத்துடன் பொழுது போக்கியிருந்தனர்.

* * * *

ஒரு நாள் மாலைக் காலத்தில் சோலைக் காட்சியைக் காண்பதற்குத் தனிமையாகச் சீவகன் சென்ருன். அந்தச் சோலையில் 'வீணை வாசித்துக் கொண்டு தேசிகப்பாவையென்னும் நடன மங்கை உட்கார்ந்திருந்தாள். சீவகன் அவளைக் கண்டான். 'முன்பு சோலையில் நாட்டியம் ஆடுகையில் நம்மைக் கண்டு காதல் கொண்ட மங்கையே இவள்' என்பதை அறிந்துகொண்டான். மாலைக் காலத்தில் மணம் வீசும் சோலையில், சமுதாய சோபையும், அவயவ சோபையுமாகிய பூக்களைப் பூத்த பூங்கொடி போன்றிருந்தாள் தேசிகப்பாவை. அவள்மீது சீவகன் காதல் கொண்டு அருகில் சென்ருன். சீவகனைக் கண்ட தேசிகப்பாவை நாணமும் மகிழ்ச்சியும் அடைந்தாள். 'என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட வீரனை என்று காண்பேன்' என்று ஏங்கியிருந்த அவள் சீவகனை வணங்கித் தலை குனிந்து நின்ருள். சீவகன், அவளை அணைத்துத் தழுவி இன்புற்று சோலையில் உள்ள காட்சிகளைக் கண்டு மகிழ்ந்திருந்தான். இருட்டு நெருங்கிய பின்பு, அவளிடம் விடை பெற்றுத் தன் மாளிகைக்குச் சென்ருன்.

* * * *

சீவகனுக்குச் சிறிதும் குறைவு ஏற்படாமல் உலோகபாலனும் தனபதியும் உபசரித்திருந்தனர். பலவகையில் இன்பத்தைத் தந்து சீவகனைப் பதுமை மகிழ்வித்தாள். இரண்டு மாதங்கள் வேறு கவலையில்லாமல் சீவகன் இன்பமுடன் பொழுது போக்கினுன். மேல் நடக்கும் காரியங்களை எண்ணிய சீவகன், அவர்களைப் பிரிந்து போக எண்ணினுன். ஒரு நாள் நடு இரவு எங்கும் நிசப்தமாக இருந்தது. பூக்கள் பரப்பிய கட்டிலில் பதுமையும் சீவகனும் படுத்திருந்தனர். சீவகன் மார்புமீது தாமரைப் பூப்போன்ற தன் கையை வைத்துக் கொண்டு பதுமை உறங்கினுள். சீவகன் பதுமையின் கையை மெள்ள எடுத்து படுக்கையில் வைத்தான். அவள் உணராதபடி படுக்கையை விட்டு எழுந்து நடந்தான். உடம்பை விட்டு உயிர் நீங்குவதுபோல் பதுமையை விட்டுச் சீவகன் பிரிந்தான். விரைவாகப் பள்ளியறையை விட்டு அகன்று அரண்மனை வாயிலையும் கடந்தான். நள்ளிருளில் நகரத்தினெல்லையைச் சீவகன் கடந்து கொண்டிருந்தான்.

விடியற்காலையில் பதுமை கண் விழித்தாள். பக்கத்தில் சீவகனைக் காணுமல் 'துணை பிரிந்த அன்றிலைப் போல் மனங் கலங்கிப் பல இடங்களில் தேடினுள். எங்கும் காணவில்லை. தான் வளர்த்த கிளி, பூவை, மயில் முதலியவற்றைக் கோபித்தாள். விளக்கு, செடி, கொடி, மரம் முதலியவற்றை நோக்கி வாய் விட்டுப் புலம்பினுள். தன் அங்கங்களை வெறுத்தாள் ஆபரணங்களைக் கழற்றி எறிந்தாள், பதுமை புலம்புவதை கண்ட தோழி அவளுக்கு ஆறுதல் சொன்னுள் 'பதுமையின் இனிய காமச் செவ்வியிலே சீவகன் பிரிந்து சென்ருனே' என்று தாயும் தந்தையும் வருந்தினர். சீவகன் வந்து விடுவான்' என்று, பதுமையின் தாய் திலோத்தமையும், தோழியும் ஆறுதல் கூறினர். பதுமையும் சிறிது ஆறுதலடைந்திருந்தாள்.

சீவகனைத் தேடும்படி, தனபதி பல தூதரை அனுப்பினுன். அவர்கள் நகர் தாண்டிப் பல இடத்தும் தேடினர். தன்னைத் தேடுவதை அறிந்த சீவகன் வேற்று வடிவம் கொண்டு சென்ருன். சீவகனைக் கண்ட தூதர், "உம்மைப் போன்ற அரச குமாரனைக் கண்டீரோ" என்று கேட்டனர். சீவகன் சோதிடம் கூறுபவன் போல் நடித்து, "அவனை ஒன்பதாம் மாதத்தில் காண்பீர்" என்று கூறிச் சென்ருன்.

அடுத்த வாரம் :

கேமசரியை மணந்தது

நரஸூஸ்
டீ,
காபி
விலையிலும்
தரத்திலும்
நிகரற்றவை

ருசிக்கு
ருசி
விலையும் மலிவு

எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானாலும் இந்தியாவில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும்.
மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :—
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
ஹெட் ஆபீஸ்:
சேலம்.
MNK.13 TM

நாடகம்

உடைந்த ஹிருதயம்

வி. கே. வெங்கடராமணம்

எழுதியது

சேவகன் உள்ளே வருகிருன்

ஜயசந்திரன்:—யாரங்கே? ....

சேவகன்:—மஹாராஜ்! நமஸ்காரம். சேனுதிபதி தங்களைப் பார்க்க வந்திருக்கிருர்.

ஜயசந்திரன்:—உடனே அவரை வரச்சொல்.

(சேனுதிபதி வருகிருர்.)

சேனுதிபதி:—அரசே! நமஸ்காரம்.

ஜயசந்திரன்:—சேனுதிபதி! என்ன விசேஷம்?

(சேனுதிபதி உட்காருகிருர்.)

சேனுதிபதி:—இன்றைய போர்முனைச்செய்திகள் யாவை?

சேனுதிபதி:—அரசே! போர் முனைகளில் விசேஷ மாறுதல்கள் ஒன்றும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. எல்லா முனைகளிலும் நமது படைகளும், முஹம்மது கோரியின் படைகளும் ஒன்று சேர்ந்து பலமாகவே தாக்குகின்றன. ஆனல், பிருதிவியினுடைய சேனைகள் சிறிதும் மனத்தளர்ச்சியின்றி கோரமாகப் போர்புரிகின்றன.

ஜயசந்திரன்:—என்ன அப்படிக் கூறுகிருய்? இரண்டு நாட்களாக நம சேனைகள் எல்லா முனைகளிலும் முன்னேறிக் கொண்டிருப்பதாகச் செய்திகள் கிடைத்தனவே...

சேனுதிபதி:—ஆம்...உண்மைதான். ஆனல் முன்னேறிய நம் சேனைகளைப் பின்னல் வந்து சூழ்ந்து கொண்டு எதிரிகள் இரு பக்கங்களிலும் போரை நடத்துகின்றுர்கள். அதனல் நமக்கு பொருட் சேதமும், ஆட் சேதமும் அதிகமேற்படுகின்றன. நம் துருப்புகளின் முன்னேற்றத்தைக் கொஞ்ச நாட்களுக்கு ஓர் ஸ்திரமான முன்னேற்றமாகக் கருத முடியாது.

ஜயசந்திரன்:— இப்பொழுது எதிரியின் சேனுதிபதி யார்?

சேனுதிபதி:— எதிரியின் சேனுதிபதி சமரசிங்கன்தான். அவன் ஏற்படுத்தும் வியூகங்களைப் பிளந்து செல்வதில் பல்லாயிரக்கணக்கான நமது துருப்புகள் உயிரிழக்க நேரிடுகின்றது.

ஜயசந்திரன்:—ஆ...... சமரசிங்கன் எதிரியின் சேனுதிபதியா? ஆமாம்...எதிரியின் சேனைகள் அவ்வளவு பலம் பொருந்தியவையா?

சேனுதிபதி:-ஆம். எதிரிகளின் சேனை எண்ணிக்கையில் குறைவாயிருப்பினும், தந்திரத்திலும், வீரத்திலும், பராக்ரமத்திலும் மிக உயர்ந்தவர்களென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

ஜயசந்திரன்:— இருக்கட்டும். கோரியின் சேனைகள் எவ்வாறு போர் புரிகின்றன?

சேனுதிபதி:-கோரியின் சேனைகளும் வீரத்துடன்தான் போர் புரிகின்றன. முகம்மது கோரியே தன் சேனையுடன் சென்று இரண்டு முனைகளில் எதிரியின் படைகளை எதிர்த்து சமரசிங்கனின் வியூகங்களையும் பிளந்து விட்டார். எதிரியின் சேனையிலிருந்த பலரையும் சிறை பிடித்து விட்டார்.

ஜயசந்திரன்:—சேனுதிபதியே ...இந்த யுத்தத்தில் வெற்றி யாருடையது?

சேனுதிபதி:—அரசே!...வெற்றியைக் குறித்துத் தாங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டாம். வெற்றி தங்களுடையதே...அதிலென்ன சந்தேகம்?

ஜயசந்திரன்:— இல்லை...... நீ கூறுவதைப் பார்த்தால் வெற்றி யாருடைய தென்பதை நிச்சயமாகக் கூறமுடியாதுபோலிருக்கின்றதே?

சேனுதிபதி:— வெற்றியைப் பற்றி நான் எள்ளளவும் சந்தேகம் கொள்ளவில்லை. நான் எதிரியின் போர் வீரர்களுடைய திறமையைப் பற்றியே தங்களிடம் கூறினேன். நேற்றுவரை நடந்த போரில் பாதி அணிகளுக்குமேல் நாசமாக்கப்பட்டன. எஞ்சியிருப்பதையும் இன்று மாலைக்குள் அழித்து விடுவோம். நாளை காலை நமது வெற்றிக்கொடி உயரும். டில்லி சிங்காதனம் தங்களுடையதே...

ஜயசந்திரன்:— சேனுதிபதி! உன் வீரத்தைக் குறித்து நான் மிகிழ்ச்சியடைகிறேன். இப்போரின் இறுதியில் நான் ப்ருதிவியின் பிணத்தைப் பார்க்க வேண்டும். இதுவே என் வைராக்கியம். இதைப் பூர்த்திசெய்வது உன் பாரம்தான்.

சேனுதிபதி:— அரசே! ஏன் அவ்வாறு கூறுகின்றீர்கள்? அவனரக் கைது செய்து சிறை வைத்துவிட்டால் போகிறது. எதிரியைக் கொல்லுவதைவிட உயிருடன் வைத்து, தான்செய்த தவறுகளை உணரும்படிச் செய்வது சிலாக்கியமன்ருே? ப்ருதிவியின் மரணம் தங்களையும் பாதிக்குமல்லவா?

ஜயசந்திரன்:—இல்லை. (பல்லைக்கடித்து) அப்பாதகனின் மரணம் என்னை ஒரு போதும் பாதிக்காது. அதைப் பற்றிக் கவலையில்லை. அவனை உயிருடன் விடுவது, பூனையை மடியில் கட்டிக்கொண்டது போலாகும். அவனல் எனக்கும், என் ராஜ்யத்திற்கும், என் குடிகளுக்கும் ஏன்? என் வம்சத்திற்கும் நாசமே உண்டாகும்......ஆதலால், அவன் மரணத்தை நான் சந்தோஷகரமாக வரவேற்கிறேன். இதனை விரைவில், முடித்து வைப்பாயாக...

சேனுதிபதி:—அரசே! அவர் எப்படியும் சுத்த வீரனுகப் போர் முனையிலிறப்பார் என்பது தான் என் திட நம்பிக்கை.

ஜயசந்திரன்:—சேனுதிபதி!... அவனை சுத்த வீரனென்று என் முன் கூருதே. அவனைப் புகழ்வது, என்னை இகழ்வதாகும். இதை நீ அறியாயா?

சேனுதிபதி:-இல்லை- அரசே! அவன் போர்க் களத்தில் மடிந்து அவனுடலைப் பருந்துகள் பிடுங்கித் தின்னும். அதையே நான் தங்களிடம் வேறு விதமாகக் கூறினேன். வேறென்றுமில்லை.

(யுத்த கோஷம் வானைப் பிளக்கிறது—சேனுதிபதி ஆசனத்தை விட்டுஎழுந்திருக்கிருர்.)

ஜயசந்திரன்:—சேனுதிபதி ஏன் திடுக்கிட்டு எழுந்தாய்?... அது என்ன கோஷம்?

சேனுதிபதி:—அரசே! இப்பொழுது பேச நேரமில்லை. விடை தாருங்கள். நான் போர்க்களத்திற்கு விரைந்து செல்ல வேண்டும்.

ஜயசந்திரன்:—சரி சென்று வாருங்கள். ஆனல், போர்ச் செய்திகளை மாத்திரம் நிமிஷத்திற்கு நிமிஷம் எனக்கு அறிவித்துக்கொண்டிருக்க வேண்டும். நான் மிகுந்த ஆவலுடன் செய்திகளை எதிர்பார்த்துக்கொண்டிருப்பேன். வீரரே! நான் மறுபடியும் தங்களுக்குக் கூறுகிறேன், இப்போரின் முடிவைப் பொருத்துத்தான் என் முடிவுமிருக்கிறது. உன்னுடைய உத்தியோக உயர்வுமிருக்கின்றது. இதை நீ ஞாபகத்தில் வை......

சேனுதிபதி:— அரசே! .... சென்று வருகிறேன். நமஸ்காரம்

ஜயசந்திரன்:—வெற்றி வீரனுகத் திரும்பி வருவாயாக.

(சேனுதிபதி வெளியே செல்கிருர்.)

சேவகன்:—அரசே! நமஸ்காரம். தங்களைப் பார்க்க யாரோ ஒருவர் வந்திருக்கிருர்.

ஜயசந்திரன்:—யாரது? எதற்காக என்னைக் காணவேண்டுமென அவரிடம் விசாரித்தாயா?

சேவகன்:—அவர் தன்னைப் பற்றியும், தான் வந்த காரணத்தையும், தான் யாரென்பதையும் கூற மறுக்கிருர்.

ஜயசந்திரன்:— அப்படித் தெரிவிக்காவிடில், அரசரைப் பார்க்க முடியாதெனக் கூறினுயா?

சேவகன்:—நான் தங்கள் உத்திரவை அவருக்குத் தெரிவித்தேன்.

ஜயசந்திரன்:—அவர் அதற்கு என்ன சொன்னர்?

சேவகன்:—அவர் தங்களைப் புகழ்கிருர். தங்களுக்குப் போர் முனையினின்று ஓர் அவசரச் செய்திகொண்டு வந்திருப்பதாகவும், அவர் அதைத் தங்களிடமே ரகசியமாகத் தெரிவித்து விட்டு உடனே செல்லவேண்டுமெனவும் கூறுகிருர்.

ஜயசந்திரன்:—சிறிது யோசித்து அப்படியானல் அவரை உள்ளே வரச் சொல்.

(சேவகன் வெளியிற் செல்கிருன். போர் வீரன் உள்ளே நுழைகிருன்.)

வீரன்:—அரசே! நமஸ்காரம்.

(காலில் விழுந்து பாதங்களிரண்டையும் கெட்டியாகப் பிடித்துக்கொள்கிருன்.)

ஜயசந்திரன்:—அப்பா! எழுந்திரு சீக்கிரம்......என் பாதங்களிரண்டையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டனையே...ஏன்? விடுவிடு...நயவஞ்சகமாக என்னைக் கொலை செய்வதற்காகப் பிருதிவி உன்னை அனுப்பினுனு? இன்னும் ஒரு நிமிஷத்திற்குள் நீ எழுந்திருக்காவிடில் உன்னைப் பகைவனுகக் கருதி இவ்வாளால் வெட்டி வீழ்த்திடுவேன்.

வீரன்:—(எழுந்து கண்ணீர் வடித்து தழு தழுத்த குரலில் பேசுகிருன்) அரசே,நான் யாரெனத் தாங்கள் அறிந்து கொள்ளவில்லையா? தங்கள் பகைவனல்ல.

ஜயசந்திரன்:—நீ யாரென எனக்குத் தெரியவில்லை. யார் நீ? ஏன் என் எதிரில் நின்று கண்ணீர் வடிக்கிருய்? காரணம் என்ன?

வீரன்:—காரணத்தைப்பிறகு சொல்லுகிறேன். முதலில் நான் யாரென்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். உடைகளைக் களைந்து விடுகிருன்.

ஜயசந்திரன்:—ஹா!......கண்ணே, ஸம்யுக்தா!...நீ, இங்கு எப்படி வந்தாய்?

ஸம்யுக்தை:—நான் உயிரை ஈசன் கையில் ஒப்படைத்து விட்டுத் தங்களிடம் புறப்பட்டு வந்தேன்.

ஜயசந்திரன்:—இந்த யுத்த களத்திற்கு நீ எதற்காக வந்தாய்?

ஸம்யுக்தை:—தந்தையே! கடைசி முறையாகத் தங்களைப் பார்த்து விட்டு, தங்களிடம் உயிர்ப்பிச்சை கேட்க வந்தேன்.

ஜயசந்திரன்:—சரி, என் கண்ணே! என் புத்திரி என்ற தோஷத்திற்காக உன்னை ஓர் முறை பார்த்தாகி விட்டது. நான் உன் தந்தை என்ற முறையில் என்னையும் நீ கடைசி முறையாகப்பார்த்துவிட்டாய்... எனக்கு மிகவும் சந்தோஷம். இனி இவ்விடத்தை விட்டுச் சென்றுவிடு. போர் அரங்கத்தில் பெண்களிருக்கலாகாது. சீக்கிரம் செல்......

ஸம்யுக்தை:—அப்பா! வெறுங் கையுடன் இவ்விடத்தை விட்டுத் திரும்பிச் செல்ல வரவில்லை. தங்கள் அழியா அன்பையும், அருளையும், பெற்றுச் செல்லவே இங்கு வந்தேன்.

ஜயசந்திரன்:—கண்ணே! என் அழியா அன்பை உனக்கர்ப்பணம் செய்கின்றேன். ஆனல் போர்க்களத்தில் அருளை மட்டிலும் அளிக்கமாட்டேன். அதை நீ கேட்பதும் தகுதியல்ல.

(தலை குனிகின்ருன்.)

ஸம்யுக்தை:—தந்தையே, தருணமறிந்து தலை குனிதல் தகாது. ஆபத்து அளவு கடந்துவிட்டது. நான் தங்கள் அருமை புத்திரி... பிருதிவிராஜன் தங்கள் மருகர். சிறிது யோசித்துப் பாருங்கள். டில்லிக்கு யார் அரசராயிருந்தாலென்ன?......எல்லாம் ஒன்றே ...தாங்கள் நியாயமான காரணமின்றி பிருதிவியின் மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ள, கோரியுடன் சேர்ந்துகொண்டிருக்கிறீர்கள். நாளைக்கு ராஜபுத்திர வீரராகிய தாங்கள் கை கட்டி, வாய் பொத்தி, தலை குனிந்து அவனெதிரில் நிற்கப் போகின்றீர்களா?

ஜயசந்திரன்;—உஸ்......ஸ்... ஸம்யுக்தா,—வேண்டாம்...வேண்டாம்...நீ இவ்வாறு பேசாதே...

ஸம்யுக்தை:—தந்தையே!...... நன்கு சிந்தித்துப் பாருங்கள். என் கணவர் தங்களுக்கிழைத்த குற்றம்தான் என்ன? என்னைத் தன் மனைவியாக ஏற்றுக்கொண்டதே அவர் செய்த குற்றம். அக்குற்றத்திற்கும் நானே பொருப்பாளி. ஆதலால், தங்கள் கை வாளினால் என்னை வெட்டி வீழ்த்துங்கள். பின்னர் என் கணவரையும் கொன்று விடுங்கள்.

ஜயசந்திரன்:—ஸம்யுக்தா!... உன் வார்த்தைகள் என் மனதைப் புண்படுத்துகின்றன. வேண்டாம் எழுந்து, செல்.

ஸம்யுக்தை:—அப்பா! நான் தங்கள் ஆசியைப் பெறுமல் இவ்விடத்தை விட்டு அகலமாட்டேன். தந்தையே, தங்கள் புத்ரியாகிய ஸம்யுக்தை. தங்கள் மருமகனாகிய பிருத்திவிக்கு உயிர்ப்பிச்சை யளிக்கும்படி கண்ணீர் விடுவதை கண்ணாரக் கண்டு, தாங்கள் சகிக்கின்றீர்களா? தங்கள் குலத்துதித்த பெண்ணின் ஓர் துளி கண்ணீர், இப்பெரிய ராஜ்யத்தை ...ஏன்?—இந்த உலகையே அழித்துவிடுமென்பதைத் தர்ம சாஸ்திரங்கள் முறையிடுகின்றனவே ...இதைத் தாங்கள் அறியீரா? ஆனால், நான் தங்களுக்கு நியாயம் சொல்ல வரவில்லை... அப்பா! மனித வாழ்க்கை நிரந்தரமற்றது. நீர்மேற் குமிழி போன்றது. என் கணவரைக் கொன்ற பின் நான் உயிருடனிருப்பேனா? தங்கள் மகளும், மருமகனும் இறந்த பிறகு தாங்கள் மகிழ்ச்சியுடனிருக்கப்போகிறீர்களா? போகட்டும்......எங்களிருவரையும் பலியிட்டுத் தாங்கள் சம்பாதித்து வைக்கும் இந்த ராஜ்யத்தை தங்களுக்குப் பின் யார் ஆளப் போகிறார்கள்?...... அப்பா! வேண்டாம்...வேண்டாம். ஜயசந்திரன் தன் மகளையும் மருமகனையும் அக்கிரமாகக் கொன்று ராஜ்யத்தையும், குடிகளையும் அன்னியர்களிடம் ஒப்படைத்து விட்டான் என்ற அவச் சொல் எதிர்கால சரித்திரத்தில் பதியப்படும். உலகம் உள்ளளவும் தங்களை எதிர்கால மக்கள் நாட்டைப் பறிகொடுத்த பாவி என ஏளனம் செய்வார்கள். பழிப்பார்கள். கடிந்து கொள்வார்கள். வேண்டாம்; வீண்பழிக்கு ஆளாகாதீர்கள். மனித சமூகமே தங்களை வெறுத்துத் தள்ளும். இதை நன்கு யோசித்துப் பாருங்கள்.

ஜயசந்திரன்:—ஸம்யுக்தா!... என்னிடம் வீண் வார்த்தைகளைப் பேச வேண்டாம். விரைவில் உன் இருப்பிடத்திற்குச் செல்......

ஸம்யுக்தை:—தந்தையே!...... என் இருப்பிடம் இன்னதென்பதை நிர்ணயித்துக்கொண்டு போகவே இங்கு வந்தேன்! வீணாகப் பிடிவாதம்வேண்டாம். வஞ்சகத்தை விட்டு விடுங்கள். தாங்கள் சுயம் வரம் வைத்த தனாலன்றோ, நான் பிருதிவி ராஜனுக்கு மாலையிட்டேன். சுயம்வரத்தின் போதாவது, அவருக்கு, நான் மாலையிடலாகாதென தாங்கள் என்னிடம் கூறினீர்களா? தாங்கள் யாரையாவது ஒருவரைக் குறிப்பிட்டு அவரை மணந்து கொள்ளும்படி கூறியபின், நான் தங்களை மீறினேனா? தாங்கள் எனக்கிஷ்டமான ஒருவரை மணம் புரிந்து கொள்ள அனுமதியளித்தீர்கள். நான் அதன்படி எனக்கிஷ்டமான ஒருவரைத் தேர்ந்தெடுத்தேன். அது யாருடைய குற்றம்?

ஜயசந்திரன்:—குழந்தாய்... நான் எவர் மீதும் இப்பொழுது குற்றம் சுமத்தவில்லையே...கடந்ததைக் குறித்து பேசுவதில் பயனென்ன? அர்த்தமில்லாமற் பேசாதே.

ஸம்யுக்தை:—தந்தையீர்!... தாங்கள் என் பிதாவாதலால் தங்களிடம் என் உள்ளம் திறந்து என் கணவரின் உயிர்ப் பிச்சை கேட்கிறேன். அன்னியனால் அவனெதிரில் நின்று தலை குனியமாட்டேன். நான் ரஜபுத்திர வீரரின் மகள்... தந்தையே, நான் தங்களைக் கடைசியாகக் கேட்பது இக் கேள்விதான். தாங்கள் இவ்வுலகில் புகழை விரும்புகிறீர்களா? இகழை விரும்புகிறீர்களா? தாங்கள் புகழை விரும்பினால், என் கணவரைக் காப்பாற்றுங்கள். தாங்கள் ராஜபுத்திரவீரர். தர்மத்தை காப்பது தங்கள் முதற் கடமை.

ஜயசந்திரன்:—பெண்ணே!... யுத்த களத்திற்கு வந்து தர்மத்தைப்பற்றிப் பேசுவது பேதமை. ரஜபுத்திர வீரர்கள் தங்கள் வைராக்யத்தை உயிர் கொடுத்தேனும் நிறைவேற்ற வேண்டுவது அவர்களுடைய தர்மமல்லவா?

ஸம்யுக்தை:—தந்தையே... இனி பேசுவதிற் பயனில்லை. நேரமாகி விட்டது. கடைசியாகக் கேட்கிறேன். தாங்கள் அருமையாக வளர்த்த புத்திரி ஸம்யுக்தை உயிருடன் இருக்க வேண்டுமா? அல்லது உயிருடன் சாம்பலாக வேண்டுமா? யோசித்துப் பதில் கூறுங்கள், மீகளைக் கொன்று மகிழ்ச்சி யடையும் தந்தையின் பெயர் இவ்வுலகில் ஒரு நாளும் மறையாது. பிடிவாதம் வேண்டாம்.

ஜயசந்திரன்:—ஸம்யுக்தா! காரியம் மிஞ்சிப் போய் விட்டது. நான் உன் கோரிக்கையை நிறைவேற்ற இயலாத நிலைமையிலிருக்கிறேன். உன் வேண்டுகோளுக்கு இணங்குவதானது யானை தன் தலை மீது மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது போலாகும். நான் ஒருகாலும் உன் கோரிக்கைக்கு இணங்க முடியாது. இது உண்மை. கடவுள் மீதாணை......(பல்லைக் கடித்துக் கொண்டே) உன் கணவன்-அத் துரோகி பிருதிவியின் பிணத்தைப் பார்த்த பின்னரே என் மனம் சாந்தமடையும். (சத்தம் 'டபார்' என்று) நீ இவ்விடத்தை விட்டு உடனே சென்று விடு. என்னைத் துன்புறுத்தாதே...- துணைக்காக என்போர்வீரர்களை அனுப்புகிறேன். செல்...... செல......

ஸம்யுக்தை:—(அழுதுகொண்டே உரத்த குரலில்) தந்தையே! தங்கள் மனம் கல்லோ? அன்றி இரும்போ? "பெண் என்றால் பேயு மிரங்கு"மென்பார். ஆனால், அப்பேய்க் கிருக்கும் கருணை கூடத் தங்களுககு இல்லையே? தாங்கள் மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவர்தானா? ரஜபுத்திரர்களின் பெருமையைச் சீர்குலைக்க அரச வம்சத்தில் தோன்றிய கோடரிக்காம்போ நீர்? வன்னெஞ்சம் படைத்த தந்தையே... போதும் தங்கள் உதவி...எனக்குத் துணை வேண்டியதில்லை. என்னைப் பாருங்கள். என் கண்ணீரின் ஒவ்வொரு துளியும் ஓர் கூரிய அம்பென்பதைத் தாங்கள் ஞாபகத்தில் வையுங்கள். வீரரான என் கணவரின் உயிர் நீங்கிய பின் தாங்கள் நிரந்தரமான துக்கத்தையே அனுபவிக்கப் போகிறீர்கள். இது சத்தியம். என் கணவரைக் காட்டிக் கொடுத்த தாங்கள் இன்னும் எத்தனை நாள் இந்த ராஜ்யத்தை வைத்துக்கொண்டு வாழப்போகிறீர்கள். தங்கள் நடத்தையைப் பற்றி உலகம் பழிக்கும். இப்பாவம் தங்களை விடாது. அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும் என்பதைத் தாங்கள் உணர வேண்டும். இன்று என் ஹிருதயம் உடைந்தது. தாங்கள் அக்கிரமமாகச் சம்பாதிக்கும் இந்த இராஜ்யமும் விரைவில் உடைந்துவிடும். இதை நான் சிறந்த தீர்க்க திருஷ்டியுடனும், சத்தியமாகவும் சொல்லுகிறேன். தந்தையே...நான் சென்று வருகிறேன்...இறப்பதற்குமுன் தங்கள் ஆசியை எனக்கு அளியுங்கள். தங்களுக்கு மீண்டும் ஓர் முறை என் நமஸ்காரம்.

[இராணி சம்யுக்தை ஜயசந்திரனின் கூடாரத்தை விட்டு மிக வேகத்துடனும், ஆத்திரத்துடனும் வெளியிற் செல்கிறாள்.]

கர்ப்பத்தைத்தடுக்க 'ரஹாத்'

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவறாமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

இந்த விசேஷமான ஸோப்பு வீட்டுச் சலவைகளை அதிக சுலபமாக்குகிறது :: :: ::

★ ஆடைகளை அதிக வெண்மையாக அலக்குகிறது.

★ மெல்லிய வஸ்திரங்களுக்கு சேதமைப்ப தில்லை.

★ மிருகக் கொழுப்பு கலப்பில்லை.

டாம்கோ விற்பனை இலாகா:- 1, வாரன் ரோட், மிமன்பேட்- மைலாப்பூர், மதராஸ்.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட். டாடாபுரம் & பம்பாய்

F S. 1954.





கே. சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சிக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ், 7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.

பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

ராணியின் அட்டிகை

சிறு கதை

★

'கணபதி'

எழுதியது

கமலா பல மாதங்களாக கல் அட்டிகை வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தாள். அன்று ஒரு அட்டிகை விலைக்கு வந்தது. நன்றாகத்தான் இருந்தது. எனக்கும் வாங்கிவிடலாம் என்று தோன்றியது. ஆனால் எனக்கு கற்களின் 'நோட்டம்' தெரியாது. அதனால் அதை எடுத்துக்கொண்டு என் நண்பன் ஸ்ரீநிவாஸன் வீட்டிற்குப் போனேன். அவன் சிறு வயதில் என்கூடப் படித்த நண்பன். இப்பொழுது ஒரு பெரிய நகை வியாபாரியாக இருந்தான். சிகப்பு, வைரம் முதலியவைகளின் 'நோட்டம்' நன்றாகத் தெரிந்தவன்.

ஸ்ரீநிவாஸன் வீட்டில் இருந்தான் நான் வந்த விஷயத்தைச் சொல்லி அட்டிகையைக் காட்டினேன்.

"கல் அட்டிகை இதைப் பார்த்ததும் முன்பு நடந்த சம்பவம் ஞாபகம் வருகிறது" என்றான்.

"என்ன சம்பவம்?" என்று கேட்டேன்.

"அது நான் இந்த வியாபாரத்தில் புகுந்தபோதுள்ள முதல் கதை; உனக்கு சொல்லியதே இல்லை. இப்பொழுது சொல்லி விடுகிறேன்: நாம்படிக்கும்போது நம் பள்ளிக்கூடத்தில் முத்து என்றொரு விஸ்வகர்மா ஜாதிப் பையன் இருந்தான். நான் அவன் வீட்டிற்கு அடிக்கடி போவேன். அவனுக்கொரு தாத்தா இருந்தார். அவர் வைரம் சிகப்பு முதலிய கற்களின் 'நோட்டம்' கண்டுபிடிப்பதில் மிகவும் கெட்டிக்காரர். தான் எப்படி அநேக தடவை சிறந்த கற்களை சொற்ப விலைக்கு வாங்கி பல ஆயிரங்களுக்கு விற்பதை பற்றிக் கூறுவார். எனக்கு இந்த கல் 'நோட்டம்' பார்த்துத் தெரிந்துக் கொள்ள மிகவும் ஆசை. என் ஆர்வத்தைக் கண்டு முத்துவின் தாத்தா எனக்கு கற்களின் வித்யாசம் முதலியவற்றைச் சொல்லித் தருவார். பல கற்களை என்முன்கொண்டு வந்து சிறந்ததைக் கண்டு பிடித்து அவை ஏன் சிறந்தவை என்று கூறும்படிக் கேட்பார். இவ்வித அப்யாசத்தால் நாளடைவில் எனக்கு இந்தக் கற்களின் நோட்டம் நன்றாக தெரிந்து விட்டது. நானும் அவரைப் போல் ஒரு பெரிய வியாபாரி ஆகவேண்டுமென்றெண்ணினேன்.

"பத்து வருஷங்கள் ஓடி மறைந்தன. திடீரென்று என் தந்தை இறந்தார். சில வருஷங்களுக்கு முன்பே என் தாய் இறந்துவிட்டாள். எனக்கு இந்த உலகத்தில் இருந்தது என் தந்தை வைத்து விட்டுப்போன பதினைந்தாயிரமே. அதை வைத்துக்கொண்டு நகை வியாபாரம் செய்து பிழைக்கலாம் என்று முடிவு செய்தேன். ஏதாவது பழைய நகையை சொற்ப விலைக்கு வாங்கி அதைப் புதிப்பித்து பல ஆயிரங்களுக்கு விற்று பணக்காரனாக வேண்டும் என்று எனக் காசை.

பல மாதங்கள் சென்றன. ஒருநாள் ஒரு பெரிய பணக்காரர் சில நகைகளை விற்பதாகப் பத்திரிகையில் விளம்பரம் செய்திருந்தார். அவர் வீட்டிற்குச் சென்றேன். சில நகைகள் இருந்தன. அப்பிரபு ஒரு கல் அட்டிகையைக் காட்டி அதை மிகவும் குறைந்த விலைக்குத் தருவதாகச் சொன்னார். அதை வாங்கிப்பார்த்தேன். அதில் மிகவும் களங்கமுள்ள கற்கள் சில இருந்தன. மிகுந்தவை மிகவும் சிறந்த கற்கள். அந்த அட்டிகையை வாங்கினேன். பிறகு களங்கமுள்ள கற்களை எடுத்து, மற்றவைக்கேற்ற சிறந்த கற்கள் வாங்கிப் புதிதாகக் கட்டினேன். மொத்தம் எனக்கு எட்டாயிர ரூபா ஆயிற்று. ஆனால் அந்த அட்டிகை எவ்வளவு சிறந்ததாக இருந்தது! அதைப் பார்த்ததும் அது ஒரு ராணியின் அட்டிகை என்று முடிவுக்கு வந்தேன். அதை ஒரு ராணிக்கே விற்பது என்று தீர்மானித்தேன். ஒரு ராணியின் கழுத்தே அதற்குச் சரியான இடம். மேலும் அவ்வாறு செய்வதால் ஒரு ராஜாங்கத்தின் திருப்தியைப் பெறலாம். அது என் வியாபாரத்திற்கு உதவியாக இருக்கும்.

"அப்பொழுது பலராஜாக்கள் பம்பாய் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டேன், அங்கு போய் அவர்களைச் சந்திக்கலாம். அவர்கள் நிச்சயம் என் அட்டிகையை வாங்குவார்கள் என்று எண்ணி பம்பாய் சென்றேன்.

"பம்பாயில் ஒரு பெரிய ஓட்டலில் தங்கினேன். ராஜாக்களைப் பேட்டி காண்பதென்றால் சுலபமா? நான் வந்து பத்து நாட்கள் ஆகிவிட்டன. ஆயினும் என்னால் ஒருவரையும் பார்க்க முடியவில்லை.

"என் பக்கத்தறையில் ஒரு தென்னிந்தியர் இருந்தார். அவருக்கு சுமார் 45 வயதிருக்கும் நாங்கள் இருவரே அந்த ஓட்டலில் தென்னிந்தியர்கள். எங்களுக்காக வேறுணவு கொண்டு வருவார்கள், நாங்கள் இருவரும் சேர்ந்தே சாப்பிடுவோம். இதனால் எங்கள் இருவருக்கும் பழக்கமுண்டாகியது. சில தினங்களில் நாங்கள் வெகு அன்யோன்யமாகி விட்டோம். அவர் ஒரு பெரிய தனவந்தர் என்றறிந்தேன். என் மேல் அவருக்கு அன்பேற்பட்டது.

"ஒரு நாள் அவரிடம் நான் வந்திருக்கும் காரியத்தைப் பற்றிக் கூறினேன். பிறகு என் அறைக்கு அழைத்துச் சென்று அந்தக் கல் அட்டிகையைக் காட்டினேன். அதைக் கண்டதும் அவர் அதிசயித்துவிட்டார்.

"மறு நாள் காலை நடேசய்யர் என் அறைக்கு வந்தார். அந்தக் கல் அட்டிகையின் பேச்சை எடுத்தார். தனக்கு அதை விற்று விடும்படிக் கேட்டார். நான் அவர் அப்படிக் கூறுவார் என்று எதிர் பார்க்கவில்லை. அவரிடம் அதை விற்க முடியாது என்று கூறினேன். அது ராணியின் அட்டிகை. ஒரு ராணிதான் அதை அணிய அருகதையுள்ளவள். அதனால் அதை ஒரு ராணிக்குத்தான் விற்கப்போகிறேன் என்று கூறி அவ்வாறு செய்வதால் பின்னால் எனக்கேற்படக்கூடும் நன்மையையும் கூறினேன். ஆனால் நடேசய்யர் தனககு அந்த அட்டிகை வேண்டுமென்று மன்றாடினார். எனக்கும் ரூபா பெரிதல்ல என்று கண்டிப்பாகக் கூறினேன். நீ ரொம்பப் பிடிவாதக்காரன் என்று கூறி விட்டுப் போய் விட்டார்.

"அன்று இரவு நான் எங்கெங்கோ அலைந்து விட்டு அறைக்கு வந்தேன். தூங்கு முன் கல் அட்டிகை பத்திரமாக இருக்கிறதா என்று பார்க்க பெட்டியைத் திறந்தேன். என்ன ஆச்சர்யம்! அது அங்கில்லை! அந்த அட்டிகை இருந்த இடத்தில் இருபதினாயிரம் ரூபாய் கொண்ட ஒரு பை இருந்தது. எனக்கொன்றும் விளங்கவில்லை. வெளியில் சென்று பார்த்தேன். நடேசய்யர் அறை பூட்டி இருந்தது. விசாரித்ததில் அவர் ஏதோ அவசர காரியம் இருந்ததால் ஊருக்குப் போய் விட்டார் என்றறிந்தேன். அவர்தான் இவ்வாறு செய்திருக்க வேண்டும். போலீஸில் புகார் செய்யலாமா என்று யோசித்தேன். அது உசிதமல்ல என்று தோன்றியது. எனக்கு அவர் செய்தது விசித்திரமாக இருந்தது. தான் விரும்பியதை இருடியாவது அடையும் பேர் வழி; அதிலும் ஒரு சத்தியம். ரூபாயை வைத்து விட்டுப் போயிருக்கிறார்! ஆனால் என் எண்ணத்தை தோற்கடித்து விட்டார். இதை நினைத்ததும் அந்த நகையை எப்படியாவது திரும்பிப் பெற வேண்டும் என்று தோன்றியது. அன்றே நானும் வயநாட்டிற்குப் புறப்பட்டேன்.

"நடேசய்யர் என்னை புன்முறுவலுடன் வரவேற்றுபசரித்தார். நானாவது அவராவது கல் அட்டிகையின் பேச்சை எடுக்கவேயில்லை.

"அவர் வீட்டைச் சுற்றியும் எங்கும் ஒரே பச்சை நிற மரம், செடி, கொடிகள் அடர்ந்திருந்தன. நானும் அவரும் தோட்டத்தின் வழியாக நடந்துகொண்டிருந்தோம். திடீரென்று ஆரெஞ்சு செடிகள் இருந்த இடத்தில் இருந்து "அப்பா, அப்பா, இங்கே வா, அப்பா," என்று ஒரு இனிமையான பெண் குரல் கேட்டது. அவர் என்னையும் அழைத்துக் கொண்டு அங்கு சென்றார். கையில் சில ஆரெஞ்சுகளுடன் ஒரு அழகிய யுவதி நின்றுகொண்டிருந்தாள். சுமார் பதினெட்டு வயதிருக்கும், என்ன அழகு! என்ன பார்வை!! அந்த மரம் செடிகளின் இடையே ஏதோஒருவன் தேவதையோஎன்றையுருமாறு இருந்தாள். என்ன ஆச்சர்யம். என்னுடைய அட்டிகையை அவள் அணிந்திருந்தாள். நடேசய்யர் நான் ஆச்சரியமடைந்ததைப் பார்த்தார். "இவள் தான் என் மகள் இந்திராணி, அவள் அணிந்திருக்கும் அட்டிகையைப் பற்றி உம் அபிப்பிராயம் என்ன? உமக்குத் தான் அவைகளைப் பற்றி நன்றாகத் தெரியுமே" என்றார் "சிறந்த அட்டிகை, அதற்கேற்ற இடத்தில் தான் இருக்கிறது; நான் என் முன் பார்ப்பது உம் மகளல்ல, அழகின் ராணி" என்றேன். ராணி தான், ஆம் என் ஹிருதயத்திற்கும் ராணி என்று என் மனதிற்குள் சொல்லிக் கொண்டேன். நான் எண்ணியபடி அந்தக் கல் அட்டிகை ஒரு ராணியின் கழுத்தை அடைந்து விட்டது. அதனால் அதை அவ்விடமிருந்து அகற்ற வேண்டாம் என்று தீர்மானித்தேன்.

இப்பொழுதும் அது ஒரு ராணியின் கழுத்தில் தான் இருக்கிறது. என் ராணியின் கழுத்தில். அந்த இந்திராணி என் ராணியாகி விட்டாள்."



இலவசம்

எவ்வித முதலும் போடாமல், ஓய்ந்த நேரத்தில் தங்கள் ஊரிலேயே மாதம் ரூ. 75/- முதல் ரூ. 250/- வரை சம்பாதிக்க விரும்புவோர், இலவசமாக அனுப்பப்படும் பூரா விவரங்களுக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

AMERICAN N. G. COMPANY., P. B. 61, (S. M. W.) LAHORE (India)

சிறுவர் பகுதி

★

மந்திரத் தலை

★

எம்.என். கணேசையர்

ஓர் ஊரில் ஒரு ஏழைக் கிழவி இருந்தாள். அவள் இருந்த ஊருக்கும் அதற்கடுத்த ஊருக்கும் இடையில் ஓர் நதியிருந்தது. அந் நதியைக் கடக்க ஒரு பாலம் இருந்தது. சிற்சில தினங்களில் அக் கிழவி தன் ஊரிலிருந்து கிளம்பி அப் பாலத்தைக் கடந்து அடுத்த ஊருக்குப் போய்விட்டு வருவது வழக்கம்.

ஒரு நாள் அந்தக்கிழவி பாலத்தின் மேல் போய்க் கொண்டிருக்கையில், ஏதோ காலில் தட்டுப்பட்டது. அப்படித் தட்டுப்பட்டது என்ன வென்று குனிந்து பார்த்தாள். அது ஒரு மானிட தலை!

அந்த தலை அவளைப் பார்த்துப் பேசத் துடங்கிற்று. "அம்மா! என்னை உனது வீட்டிற்குக் கொண்டு போ" என்றது அது.

தலை பேசினதைக் கேட்ட அக்கிழவி திகிலடைந்து, அடுத்த ஊருக்குப் போகும் எண்ணத்தை விட்டு விட்டு வீட்டை நோக்கி ஓடினாள்; அந்தத் தலையும் அவளைவிட வேகமாய் அவளுக்கு முன் உருண்டு போய்க் கொண்டு அவளது வீட்டையும் அடைந்தது.

மிகவும் பயத்துடன் திகைத்து நின்று கொண்டிருந்த கிழவியைப் பார்த்து அந்தத் தலை "அம்மா! நான் இங்கேயே இருக்கிறேன்! என்னைத் துரத்தி விட வேண்டாம்" என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டது. கிழவி அன்று முழுவதும் பட்டினி.

சூரியாஸ்தமனமான பின்பும்கூட அக்கிழவி சமைக்க யாதொரு ஏற்பாடும் செய்யாததைப் பார்த்த அத் தலை அவளைப் பார்த்து "அம்மா! இந்த வீட்டில் ஒருவரும் சாப்பிடுவது வழக்கம் இல்லையா என்ன?" என்று கேட்டது.

"இன்று இங்கு சாப்பாடு இல்லை தான்" என்றாள் கிழவி.

"ஏன் சாப்பாடு இல்லையாம்?" என்று தலை கேட்டது.

"சாப்பாடு இராததற்குக் காரணம் கையில் காசு இராதது தான்" என்றாள் கிழவி.

"ஆனால் பிரதி தினமுமே நீ ஒன்றும் சாப்பிடுவது இல்லையோ?" என்று கேட்டது தலை.

"சாப்பிடாமலென்ன! நான் பிரதி தினமும் அந்த பாலத்தைக் கடந்து அடுத்த கிராமத்திற்குப் போவேன். அங்கிருந்து ஆகாரம் கொண்டு வருவேன். இன்று நான் அங்கு போகவில்லை. ஆதலால் வீட்டில் சாப்பிட ஒன்றுமில்லை! அவ்வளவே!" என்றாள் கிழவி.

"அப்படியானால் நீ பட்டினி கிடப்பதற்குக் காரணம் நான் இல்லையா?" என்றது தலை.

"அதற்கென்ன சந்தேகம்" என்றாள் கிழவி.

"அம்மா! நீ பட்டினி கிடக்க வேண்டியது அனுவசியம்! நான் பாலத்தில் இன்று இருந்த இடத்திற்கு நீ போய் "நாராயணா" என்று கூப்பிடு. ஒருவன் வருவான். என்ன வேண்டும் என்று கேட்பான். அவனது யஜமானனாகிய தலை அவனிடமிருந்து இரும்புப் பெட்டியிலிருக்கும் பச்சைப் பட்டுப் பையை வாங்கிக் கொண்டு வரச் சொன்ன தாய்ச் சொல்லு: அவன் கொண்டு வந்து கொடுப்பான். வாங்கிக் கொண்டு வா" என்றது தலை.

கிழவியும் தலை சொன்னது போல் செய்து, ஒரு பை நிறையப் பணத்துடன் திரும்பி வந்தாள். அப் பணத்தைச் செலவு செய்து கொண்டு கொஞ்ச காலம் சௌக்கியமாய்க் காலம் கழித்தாள்.

ஒரு நாள் தலை, கிழவியைப் பார்த்து "அம்மா! நீ இந்த ஊர் அரசனிடம் சென்று நான் அவனது குமாரியை மணந்து கொள்ள இச்சைப் படுகிறேனென்று சொல்"

தலையினிடத்தில் கிழவிக்குப் பயம். ஆதலால் அவள் அது சொன்னபடியே செய்தாள்.

அரசன் "இதோ எனது அரண்மனைக்கு முன் இருக்கும் மலைத் தொடர்களை அழித்து அவைகள் இருந்த இடத்தில் நந்தவனம் ஒன்று ஏற்படுத்தினால் நான் எனது குமாரியை அவனுக்கு மணம் செய்து கொடுப்பதாகச் சொன்னதாகச் சொல்" என்றான் கிழவியிடம். தலை அவ்வாறே செய்து முடித்தது.

தலைக்கும் அரச குமாரிக்கும் கலியாணம் நடந்ததும். அந்தத் தலை சாபம் நீங்கி ஸர்வ அங்கங்களோடு கூடிய அழகிய அரச குமாரனாக மாறி விட்டது.

அந்த அழுக்குப் படிந்த கைகளைப் பாருங்கள்— மேலும், அழுக்கு அபாயமானது!

அவன் லைப்பாய் முறையை அனுஷ்டிப்பதால், "அழுக்கு அபாய"த்திலிருந்து காப்பாற்றப்படுகிறான்!

நீங்கள் பம்பரத்தைச் சுழற்றி, அது ஆடிக் கொண்டிருக்கும் போது அதைத் தரையிலிருந்து உங்களுடைய கைக்கு ஏற்றி வைத்துக்கொண்ட அந்த நாட்கள் உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? உங்களுடைய கைகள் எவ்வளவு அழுக்கடைந்து வந்தன என்பதும் உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா?

இன்றைக்கும் அது போலத்தான் நடந்து வருகிறது—ஆனால் நாம் இப்பொழுது அழுக்குப்படிந்த கைகளின் அபாயத்தை அறிந்திருக்கிறோம். தூசியும் அழுக்கும் கிருமிகளைக் கொண்டு செல்கின்றன வாகையால் நோயை உண்டாக்கவும், தொத்து வியாதியைப் பரவச் செய்யவும் கூடும் என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

ஆகவே நாம் இப்பொழுது நமது பையன்களுக்கு லைப்பாய் முறையைப் போதிப்போம். லைப்பாய் கிருமி நாசன ஸோப் என்பதையும், ஆரோக்யத்தைப் பாதுகாக்கக் கூடிய விசேஷத்தைப் பிரத்யேகமாய்க் கொண்டுள்ளதையும் இப்பொழுது நாம் அவர்களுக்குச் சொல்வோம். அடிக்கடி முறை தவறாமல் லைப்பாயினால் அவர்கள் சுத்தம் செய்து கொள்வதையும், அதனால் அவர்கள் அழுக்கு-அபாயத்திலிருந்து காப்பாற்றப் படுவதையும் நாம் பார்ப்போம்.

ஒரு நல்ல ஸோப்பைக் காட்டிலும் சிறந்தது

லைப்பாய்

அது ஒரு நல்ல வழக்கம்

L. 32—169 TM.

LEVER BROTHERS (INDIA) LIMITED

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

அல்ல கல்லோலமாயெனம்ம யமுனா தேவி மா-
யார்த்துலெல்லனு தீர்பவம்மா

அனுபல்லவி

மொல்லசே பூஜிஞ்சி ம்ரொக்கேமு ப்ரோஷமம்ம

சரணம்

1. மாரு பாரிகி தாளலேக ஈ ராஜகு
மாருனி தெச்சிதி மிந்தாக
தாருமாராயே ப்ரதுகு தத்தளிஞ்சே தெந்தாக
2. காலி வானலு நிண்டாராயே மாபனுலெல்ல
கேலி ஸேயுட கெடமாயே
மாலிமிதோ மம்மேலு மகனியெட பாயனுயெ
3. ஸொம்முலெல்ல நீ கொஸகேமம்மா யமுனாதேவி
ஈ ஸுமுகுனி கட்டு ஜேர்பு மம்மா
யெம்மெகானி பலிமினி யேல தெச்சிதி மம்ம
4. நளின பவுடு வ்ராஸின வ்ராலு யெட்லைன கானி
நாதுடு ப்ரதிகி யுண்டே சாலு
ப்ரளய முலய்யீனியே பனிஜேஸி னபாமலு
5. தேஹமு லெல்லனொஸகே மம்மா ஓ தேவி கிருஷ்ண
தேவுனி கட்டுஜேர்பு மம்மா
மோஹனுங்குனி மேமு மோஸ புச்சி தி மம்ம
6. மே மொக்கடெஞ்ச போதிமம்ம மா பாலிதே வு-
டேமோ எஞ்சுகொன்னு டம்மா
ராமரோ ஸ்ரீதியாக ராஜாப்துனி பாயமம்ம

II

யமுனாதேவி!—யமுனாதேவியே!
அல்லகல்லோலமாயெனம்மா—ஒரே குழப்பமாய் போய்விட்டது தாயே
மாஆர்துலெல்லனு தீர்பவம்மா—எங்கள் கஷ்டங்களை எல்லாம் தீர்ப்பாயம்மா!
மொல்லசே—முல்லைப்புஷ்பங்களால்
பூஜிஞ்சிம்ரொக்கேமு—உன்னைப் பூஜித்து நமஸ்கரிக்கின்றோம்
ப்ரோவுமம்மா—எங்களை ரக்ஷித்தருள்வாய் தாயே [தாயே
மாரு பாரிகி தாளலேக—மன்மதனின் கணைக்குத் தப்பமுடியா
யிராஜகுமாருனி—இந்த ராஜகுமாரனான கண்ணனை [மல்
இந்தாக—இவ்வளவு தூரம்
தெச்சிதிமி—கூட்டிக்கொண்டு வந்தோம்
ப்ரதுகுதாருமாராயே—எங்கள் பிழைப்பு தாருமாருய் போய் [விட்டது
யெந்தாக—எவ்வளவென்று
தத்தளிஞ்சேதி—நாங்கள் தப்பிவிப்பது.
காலிவானலு நிண்டாரு ஆயே—காற்றும் மழையும் அதிகமாய் போய்விட்டதே
மாபனுலெல்ல—எங்களுடைய செய்கைகளெல்லாம்
கேலி சேயுட கெடமாயே—பிறர் கண்டு பரிகசிக்கத்தகுந்தன [வாய்விட்டதே
மாலிமிதோ—அன்புடன்
மம்மேலு—எங்களை ரக்ஷிக்கும்
மகனீ—பரம புருஷனான கண்ணனை
யெடபாயனுயெ—பிரியும்படி செய்துவிடுவாய்போல் இருக் [கிறதே
ஸொம்முலெல்ல—நாங்கள் அணிந்துள்ள விலை உயர்ந்த ஆப [ரணங்களை எல்லாம்
நீகு ஒஸகே மம்ம—உனக்குக் கொடுக்கிறோம் தாயே
ரஸுமுகுனி—அழகுள்ள இக்கண்ணனை
கட்டு ஜோர்புமம்மா—கரை சேர்ப்பித்தருள்வாய் தாயே
யெம்மகானி—அழகான கிருஷ்ணனை
பலிமீனி—பலாத்காரமாக
யேல தெச்சிதிமம்ம—ஏன் அழைத்து வந்தோமென்று கவலை [அடைகிறோம் தாயே
நளின பவுடு—பிரும்மதேவன்.
வ்ராஸி னவ் ராலு—எங்கள் தலையில் எழுதிய எழுத்து
யெட் லைன கானி—எவ்வித மிருந்தாலும் நாங்கள் கவலை [கொள்ளவில்லை
நாதுடு—ஜகந்நாதனான கண்ணன்
ப்ரதிகி யுண்டே சாலு—பிழைத்திருந்தால் போதும்
பாமலு யேபனி ஜேஸின—ஸ்திரீகளாகிய நாங்கள் எக் காரி [யம் செய்தாலும்
ப்ரளயமுலய்யீனி—ப்ரளயமாகப் போய் விடுகின்றதே
ஓ தேவி!—ஏ! யமுனா தேவியே!
தேஹமுலு எல்ல னொஸ கேமம்மா—எங்கள் ப்ராணனை உன [க்கு அர்ப்பணம் செய்கிறோம் தாயே
கிருஷ்ண தேவுனி—கிருஷ்ண பரமாத்மாவை
கட்டு ஜேர்புமம்மா—பத்திரமாக கரை சேர்த்து விடுவாய் [தாயே.
மோஹனுங்குனி—மன்மத வடிவுள்ள கண்ணனை
மேமு—நாங்கள்
மோஸ புச்சிதிமம்மா—மோசம் செய்துவிட்டோம் தாயே
மேமொக்க டெஞ்ச போதிமம்மா—நாங்கள் ஒன்றை எண் [ணப் போனோம் தாயே
மாபாலி தேவுடு—எங்களை ரக்ஷிக்கும் தெய்வம்
ஏமேமோ எஞ்சு கொன்னுடம்மா—என்னென்னமோ நினைத் [துக் கொண்டிருக்கிறது போல் தோன்றுகிறது தாயே
ஸ்ரீ தியாகராஜாப்துனி—த்யாகராஜனின் நண்பனான கண் [ணனை
பாயமம்மா—விட்டுப் பிரிய மனமில்லை தாயே

III

முன்கதைச்சுருக்கம்:—

ஒரு சமயம் கோபியர்கள் கிருஷ்ணனுடன் ஓடத்தில் ஏறி யமுனையில் சென்று உல்லாசமாய்ப் பொழுது போக்கினர். அப்போது கோபியர்கள் கண்ணன் தங்கள் வசப்பட்டுவிட்டான் என்று கர்வம் கொள்ள அதையறிந்த கண்ணன் இந்திராதி தேவர்களுக்கு ஆக்ஞாபிக்க அவர்கள் இடி மழையை உண்டாக்கினர். அதனால் ஓடத்தில் துவாரமுண்டாகி ஓடம் முழுக வாரம்பித்தது. இதைக் கண்ட கோபியர்கள் திகிலடைந்து பிரலாபிக்கத் தொடங்கினர்.

பின்பு கோபியர்கள் கண்ணனைச் சுற்றி நின்று கொண்டு தாங்கள் கிருஷ்ணனைப் பற்றிச் சொன்ன வார்த்தைகளின் பயனோ! அல்லது தங்கள் சந்தோஷத்தைக் கண்டு மனஞ் சகியாமல் எந்த ஸ்திரீ யிட்ட சாபமோ, அன்றி தாங்கள் புறப்பட்ட வேளை சரியாயில்லையோ அல்லது எத்தேவதையின் சாபமோ என்றவாறெல்லாம் தங்களைத் தாங்களே நிந்தித்து வருத்தப்பட்டுக் கொண்டார்கள். இதனைக் கீழே காணப்படும்.

ஈ ராஜானனு னுடுகொன்ன பலமோ—யேமானினீ சாபமோ
ஈ ராமாமணு லேகுவேளகுணமோ—யே வல்ப துஷ்க்ருத்யமோ
வேறேதாரிக தோசதேயனிமதின—வேமாருசிந்திஞ்சு சுன்
நாரீ ரத்னமுலெல்ல ஜாலிபடுசுன்—னரீவ கன்வரடலோ

என்ற பாடலில் காணலாகும்.

அல்லகல்லோல:—இது நௌகா சரித்திரத்தின் 13-வது கீர்த்தனை. இக் கீர்த்தனத்தால் கோபியர்கள் மிகுந்த துக்கம் கொண்டவர்களாய் அவ்வாபத்தினின்று கண்ணனையாவது காப்பாற்றிவிடுமாறு யமுனாதேவியை வேண்டிக்கொள்ளுகிறார்கள்.

IV

ராகம் ஸௌராஷ்டிரம் — ஆதி தாளம்

(17-வது மேள ஜன்யம் ஆ. ஸம்பூர்ணம் அவ. ஸநிதநீதபம கமாக ரீஸா.)

பல்லவி

; நித ஸாஸா	ஸாரீ காமா	பதபம	கரி தா	ப்த பம	கரி கரி
அல் . ல கல்	லோல மாயே	னம் . . .	ம . ய	மு . ணு .	தே . வி .
ஸா ஸதா ஸஸா	ஸாரீ காமா	பதபம	கமாக	ரீ ;	. ஸா ;
மா யார் . து லெல்	லனு தீர்ப்ப	வம். .	ம . .	.	.

அனுபல்லவி

; தா நீஸ்ா	ஸ்நிதா நிதபா	; பா	தபபம	கம பம	கம கரி
மொால்லசே	பூ . . ஜிஞ் . சி	ம்ரொக்	கே . மு .	ப்ரோ . வு .	மம் . ம.

ஸா

(அல்ல கல்லோல)

(சரணங்களின் முதல் 2 வரியை பல்லவி போன்றும் கடைசிவரியை அனுபல்லவி போன்றும் பாடவும்.)

ஜோதிர்மண்டலம்

★

சித்ரபானுஹு புரட்டாசிமீ

★

வி சா க ம்

முன்னிரவில் நமக்குப் புலப்படும் ஆகாயக் காக்ஷிகளில் கீழ்வானில் பிரகாசிக்கும் ஆண்ட்ரமெடாக் கூட்டமும், அதனருகில் உள்ள ஆகாயப் புரவிக்கூட்டமும் அழகுடன் விளங்குகின்றன. ஆண்ட்ரமெடாவின் சரித்திரம் இந்தப் பகுதியில் முன்னே எழுதுப்பட்டுள்ளது. ஆண்ட்ரமெடா காலியோபியாவின் மகள். நெப்டியூன் என்னும் கிரேக்கக் கடவுள் காலியோபியாவிடம் அதிக கோபம் கொண்டார். அதைத் தணிக்க ஆண்ட்ரமெடாவை அர்ப்பணம் செய்வதாக ஏற்பாடு செய்துவிட்டார்கள். ஆண்ட்ரமெடாவை சமுத்திரத் தருகில் கற்பாரையில் கட்டிவிட்டார்கள், கடலிலுள்ள பெரிய பூதம் ஒன்று விழுங்கி விடுவதற்காக. கடற்பூதமும் ஆண்டிரமெடாவை நெருங்கிவிட்டது. இன்னும்கொஞ்சம் நேரத்தில் விழுங்கிவிடும். அப்பொழுது பர்ஸீயூஸ் எனும் வீரன் அங்கு தோன்றினான். கடற் பூதத்தைக் கல்லாகச் செய்தான். ஆண்டிரமெடாவை மீட்டு, பின்பு மணம் புரிந்து சுகமாக வாழ்ந்து வந்தான். இக்கதையின் முக்கிய பாததிரங்கள் அனைவரும் ஆகாயத்தில் நக்ஷத்திர—மண்டலங்களாக விளங்குகின்றனர்.

ஆண்ட்ரமெடாவின் முக்கிய நக்ஷத்திரம் ஒரு இரட்டை நக்ஷத்திரம். இதில் ஒன்று இரண்டாம் தரமானது. மற்றொன்று 11-ம் தரமானது. இதிலிருந்து ஒளி வந்து சேர சுமார் 115 வருஷங்கள் ஆகின்றன. இது நம் சூரியனைப்போல் 175 மடங்கு அதிக ஒளி வீசுவது. இந்துக்கள் கொள்கைப்படி இது உத்தர பாத்ரபத நக்ஷத்திரத்தைக் குறிக்கின்றது.

இதன் இரண்டாவது நக்ஷத்திரம், ஆண்ட்ரமெடாவின் வலது கைப்பாகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது. இதுவும் இரண்டாம்தர நக்ஷத்திரம். ஒளி இதனிடமிருந்து நமக்கு வந்து சேர சுமார் 66 வருடங்கள் ஆகின்றன. இதன் மூன்றாவது நக்ஷத்திரம், 3 நக்ஷத்திங்கள் ஒன்றுடன் ஒன்று ஆக்ரஷண சக்தியால் இணைக்கப்பட்டது. இதில் முதல் நக்ஷத்திரம் நம் சூரியனைப்போல 1500 மடங்கு அதிக ஒளி வீசுவது. இந்த நக்ஷத்திரத்திலிருந்து நமக்கு ஒளிவந்து சேர சுமார் 360 வருடங்கள் ஆகின்றன.

இக் கூட்டத்தினிடையே ஒரு அழகு பொருந்திய காக்ஷி உண்டு. இதன் இரண்டாவது நக்ஷத்திரத்திற்கு சிறிது வடக்கே நம் கண்ணிற்கு ஒரு சிறு நக்ஷத்திரத் தோற்றம் தெரிகிறது. இது ஒரு நெபுலா. இதை ஒரு தூரதிருஷ்டிக் கண்ணுடி வழியாகப் பார்த்தால் வெகு அற்புதமாக விளங்கும். இது ஒரு சுழன்ற மேகத்தை ஒத்திருக்கும். இது நம் பூமியை நோக்கி ஒரு செகண்டுக்கு 300 கிலோமீடர் வேகமாக வருகிறது. இம்மாதிரி சுழல் நெபுலாக்கள் ஆகாயத்தில் சுமார் 700,000த்திற்கு மேலிருக்கின்றன. ஆனுல் இதுவே நமக்கு மிகவும் அருகாமையிலுள்ளது.

கிரஹங்களின் நிலே

புதன்:—இம்மாதமெல்லாம் புதன் கன்னியிலேயே யிருக்கும். சென்ற மாதக்கடைசியில், புதன் சூரியனிடமிருந்து பார்வைக்குக் கிழக்கே வெகு தூரத்திலிருந்தது. ஆதலால் இம்மாத முதலில் புதனை மேல் வானில் சூரியன் மறைந்த பிறகு காணலாம். 13-ம் தேதியன்று (28-9-42) புதன் வக்ரிக்க ஆரம்பிக்கிறது. அதன் பிறகு இதற்கும் சூரியனுக்கும் இடையில் தோன்றும் தூரம் குறைந்துகொண்டே வரும். மாதக் கடைசியில் 26-ம் தேதியன்று சூரியனுடனேயே உதயமாகி அஸ்தமிக்கும். அன்று அது குஜனருகிலும், 29-ம் தேதியன்று (14-10-42) சுக்கிரனருகிலும் புதனமைந்திருக்கும். ஆனுல் இக்காக்ஷிகள் நமக்குப் புலப்படாது.

சுக்கிரன்:—சென்றபலமாதங்களாக கீழ்வானில் சூரிய உதயத்திற்கு முன் அழகுடன் பிரகாசித்து வந்தது. இம்மாதமும் கீழ்வானில் தான் சூரிய உதயத்தின் போது இருக்கும். சூரியனுக்குச் சிறிது முன்பு தான் உதயமாகும். ஆதலால் அதன் ஒளியில் மழுங்கிக் காணபடும். இது நெப்டியூனருகில் 4-10-42-ல் காணப்படும். இம்மாதம் 14-ம் தேதியன்று (29-9-42) சுக்கிரன் சிம்மக் கூட்டத்தை விட்டு கன்னிக்கு மாறுகிறது. கன்னியில் ஒரு மாத காலத்திற்கு மேல் கழிக்கிறது.

குஜன்:— இம்மாதமெல்லாம் கன்னியில் கழிக்கின்றது. 10-10-42-ம் தேதியன்று குஜன் சூரியனுடனேயே உதயமாகி அஸ்தமிக்கிறது. மொத்தத்தில் குஜனை இம்மாதம் காண்பது கடினம்.

குரு:—இம்மாதமும் மிதுனத்திலும், சனி, ரிஷபத்திலும் ஊர்ந்து வருகின்றன, சனி 10-ம் தேதியன்று (25—9—'42) வக்ரிக்க ஆரம்பிக்கிறது.

உரானஸூம், நெப்டியூனும்:- முறையே ரிஷபத்திலும் கன்னியிலும் ஊர்ந்து வருகின்றன.

புரட்டாசி மாதம்:—

1உ 11-30, 16உ 10-30, 30உ 9-30க்குச் சரியானது.



வாரா வாரம் உங்கள் கேசத்தை சீர்படுத்தும் முறைகள் :

பெண்மணிகளே, நீங்கள் அறிய வேண்டிய முக்கியமான ஒரு விஷயம்:

1 டாம்கோ தேங்காயெண்ணெய் ஷாம்பூ ஒரு புட்டி வாங்கவும் (விலே சொற்பம் தான்-இன்றே வாங்குங்கள்)

2 கூந்தலே ஜலத்தில் நனையுங்கள்.

3 ஷாம்பூவை தாராளமாக உபயோகித்து நிறைய நுரை வருமளவு தேய்க்கவும். பிறகு சுத்த ஜலம் விட்டு கூந்தலே அலசி உலர்த்துங்கள்.

4 சீப்பும் பிரஷூம் கொண்டு வாரி மினுக்கவும். இப்பொழுதும் உங்கள் கூந்தலின் அழகிய தோற்றத்தைக் கண்டு நீங்களே வியப்புறுவீர்கள்.

டாம்கோ தேங்காயெண்ணெய் ஷாம்பூ உங்கள் கேசத்தை மிருதுவாகவும், உறுதியாகவும் பளபளப்பாகவும் இருக்கச்செய்கிறது. எப்பொழுதும் அதையே உபயோகியுங்கள். எல்லா பிரபலக் கடைகளிலும் கிடைக்கும்.

டாம்கோ தேங்காயெண்ணெய் ஷாம்பூ

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா :

1, வாரன் ரோட், பீமன்பேட் மைலாப்பூர் — மதராஸ்.

தயாரிப்போர் :

டி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமி. டாடாபுரம் & பம்பாய்.

TH. 2366.

நவநாகரீகம்

★

ஒரு ஸெட் நகை

★

காசினி எழுதியது

* * * "சுலோசனு பம்பாய் போயிருந்தாளாமே? ஏதாவது புதிசாக வாங்கிக் கொண்டு வந்தாளோ?" என்று கமலினி பொதுவாகக் கேட்டாள்.

"விசேஷமாக ஒன்றும் வாங்கி வரலே. ஹல்வா, மிட்டாய் நிறைய வாங்கி வந்தாள். எங்காத்துக்கு ஒரு தட்டு நிறைய அனுப்பினுள்!" என்றுள்.

'எங்காத்துக்கும் அனுப்பினுள். தவிர!' என்று நளினுதேவி சொல்லிக் கொண்டிருக்கும் போதோ எங்காத்துக்கும் தான் அனுப்பினுள். ஆனுல் இது அவள் வாங்கவில்லேயாம், அவள் சிநேகிதி ஒருத்தி பண்ணிக் கொடுத்தாளாம். கொடுக்கும் போது இந்த எங்க ஊர் மிட்டாய் தினுசுகளே உன் சிநேகிதிகளுக்கும் கொடு என்று சொல்லவும் செய்தாளாம்!' என்றுள் ஸரோஜா.

பம்பாய்க்கு போயிட்டு ஒன்னும் அதிகமாகச் செலவு பண்ணுமலா சுலோசனு வந்துவிட்டாள்? ஏது? கெட்டிக்காரியாக இருக்காளே?' என்று லேடி சுந்திராசாரி சொன்னுள்.

'அப்படி ஒன்றுமில்லே; இவாளா கண்டதை வாங்காமெ வருகிறவர்கள்? எல்லாம் ஒரு ஸெட் நகை, புடவை இவைகளே வாங்கிக் கட்டிக்கொண்டு தான் வந்தாள்!' என்று என் அத்தை சொன்னது எல்லாருக்கும் தூக்கிப் போட்டது.

'அது என்ன எங்களிடம் ஒன்னுமே சொல்லலேயே? அத்தைக்குமட்டும் எப்படித் தெரிஞ்சுது?' என்று மாலினி ஆச்சரியத்துடன் கேட்டாள்.

'எல்லாம் காரியமாகத்தான் சொன்னுள்!' என்று சொல்லிவிட்டு என் அத்தை அலமாரியைத் திறந்து ஒரு பெட்டியை எடுத்தாள். அதில் ஒரு ஜதை அழகிய லோலக்குகள், மிகவும் அழகாக வேலே செய்யப்பட்ட அகலமான வளையல் ஒன்று, பூ வேலே செய்யப்பட்ட நெக்லெட் ஒன்று, இருந்தன. நகையை வாங்கி எல்லாரும் அழகு பார்த்தார்கள்.

'நல்ல கனமா இருக்கே? தங்கம் விற்கும் விலேக்குக் கூலி உள்பட இந்த செட் ஏகப்பட்ட விலேயாகி இருக்கும் போலிருக்கே?' என்றுள் நளினுதேவி.

'திருடி, நம்மிடம் சொல்லவே இல்லேயே!' என்று மாலினி வியந்துகொண்டிருக்கும்போதே கையில் ஒரு பொட்டலத்துடன் சுலோசனு உள்ளே வந்தாள், உடனே இவர்கள் அவளேச் சூழ்ந்து கொண்டு. பல கேள்விகள் ஏக காலத்தில் கேட்டார்கள்.

'எல்லாம் ஒரு காரியத்துக்காகத்தான் உங்களிடம் சொல்லலே! ஒரு 'ஸெட்டாப்' போட்டுக் கொண்டு சாயங்காலம் கிளப்புக்கு வரலாம் என்றிருந்தேன்!' என்று சுலோசனு சிரித்துக் கொண்டே சொன்னுள்.

'போரது! இந்த வளையல் என்ன விலே?' என்றுள் பங்கஜம்.

'பத்து ரூபாய்!' என்று சுலோசனு நிதானமாக பதில் சொன்னதும் எல்லாரும் ஒரு நிமிஷம் விழித்தார்கள். அப்புறம்: 'வெள்ளி நகையா?' என்றும் 'முலாம் பூசினுயா?' என்றும் 'தங்கம் தோய்த்தே விற்கிருளா?' என்றும் கேட்டார்கள்,

'இதுக்குத் தங்கம் தோய்க்கச் சொல்லித்தான் என்னிடம் கொடுத்தாள். இந்த வேலேயை நன்ருகச் செய்யும் ஒரு தட்டானே எனக்குத் தெரியும்! தங்க நகை என்று நன்னு ஏமாந்தேளா?' என்றுள் என் அத்தை.

'உன் கையில் என்ன பொட்டலம்?' என்று மூஞ்சியில் அசடு தட்ட நளினுதேவி கேட்டாள். தான் கொண்டு வந்திருந்த புடவையை சுலோசனு காண்பித்தாள். ஆழ்ந்த கறுப்பு நிறச் சுதேசிப் பட்டு, இதில் மெல்லிய மஞ்சள் கோடுகளினுல் அங்கங்கே பெரிய, பெரிய பூக்களாக உடல் எங்கும் போட்டிருந்தன. கரைக்கும் தலேப்புக்கும் இப்படியே பூ வேலே செய்திருந்தது. புடவை ஆறு கஜம்தான். விலே இருபது ரூபாய்கள் ஆச்சாம்.

'நகை விலே என்ன ஆச்சு? மூலாம் பூச என்ன பிடிச்சுது?; என்று லேடி சுந்திராசாரி கேட்டாள்.

'எல்லாம் சரிப்பாதி. ஆச்சு என்கலீம். மூலாம் பூசத் தங்கம், கூலி உள்பட ஐம்பது ரூபாய்கள் ஆச்சு! இந்த ஸெட் நகையின் விலேயும் அவ்வளவு தான்!' என்றுள் என் அத்தை.

'உன்னே நாங்கள் விடப்போரதில்லே. எங்களுக்கும் இப்படி ஒரு ஸெட் தருவித்துக்கொடுத்து விட்டு மறுவேலே பார்!' என்றுள் மாலினி.

'அத்தைக்கும் கூடத்தான்! மூலாம் பூசித் தருவது உங்கள் பொருப்பாக்கும்!' என்றுள் கமலினி.

'இவளிடமே வேண்டாம் என்றேன்; கேட்கலே. இதிலே போட்டிருக்கும் ஒரு பவுன் தங்கமும் விருதாத்தானே' என்றுள் என அத்தை.

'அதுக்கென்ன. மூலாம் அழிந்தால் புதிசாப் பூசினுல் போச்சு; புடவைகள் கிழியலேயோ?" என்றுள் சுலோசனு.

உண்மையிலேயே இந்த நகைகள் ரொம்பவும் நாசூக்காகவும் அழகாகவும் வெள்ளியில் செய்தது என்பதே தெரியாமல் களேயாகவும்தான் இருந்தன. மற்றைய விவரங்கள் அடுத்த கடிதத்தில்.

குட்டிக் கதை

★

அவள்

★

ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன் எழுதியது

அவள் எங்கள் அகத்து பாக்கிய லக்ஷ்மீ. அவள் எங்கள் வீட்டில் கால் வைத்தன்றையிலிருந்து எங்கள் அகத்து ஆரோக்கிய பாக்கியமும், ஐஸ்வர்ய பாக்கியமும் ஒரு மிக்க பொங்கிப் பெருகலாயின.

ஏன், அவள் வந்த வருஷம் தான் என் அகத்துக்காரருக்கு சம்பளம் உயர்ந்தது, எங்கள் கிட்டு முதன்மையில் பரீக்ஷை தேறினுன்; பெண் கமலுவுக்கு நல்ல இடத்தில் கொடுத்து கலியாணமாயிற்று. அவ்வளவு மட்டும் அல்ல. எங்கள் குடும்ப நிர்வாக சபையின் கல்வி இலாகா, சமையல் இலாகா, கரிகாய்தோட்ட இலாகா,பொக்கிஷ இலாகா முதலிய எல்லா இலாகாக்களிலும் சுப குறிகள் தோன்றின. வீட்டில் பாலும், தயிரும், வெண்ணெயுமாக பெருகின. உலர்ந்து கிடந்த பிழக்கடை தோட்டத்தில் கறிகாய்கள் குலுங்கின. அவள் சகலமான விவகாரங்களிலும் உதவியாக விருந்தாள்.

மகாலக்ஷ்மியைப்போன்ற சகல சுப லக்ஷணங்களும் கொண்டு விளங்குகிருள். அவள் மீது எங்கள் அகத்தில் சிறு குழந்தை முதற்கொண்டு முதியவர் வரையிலும் அனைவரும் அதிகப் பிரியம் காட்டி வருகிருர்கள். அவள் அவ்வளவு உத்தமி; சாது: சுந்தரி: பால் போல் வெள்ளே வெளேரென்றிருக்கிருள். அது ஒன்றே போதும், பார்ப்போர் மனதை கொள்ளே கொள்வதற்கு.

அவள் பிரசவத்திற்காகத் தனது பிறந்தகமான கிராமத்திற்குதிரும்பிய தினம் வீடு முழுவதும் வியாகூலப்பட்டோம்; அவளது தலேச்சன் குழந்தையைக் கொஞ்சி சிராட்டி,தாயார் குழந்தை இருவரையும் விட்டு பிரியமாட்டாமல் பிரிந்தோம்.

* * * *

இதோ! நாளேக்கு அவள் புதிய குழந்தையுடன் திரும்பி வரப் போகிருள் என்று வீடு பூராவும் திமிலோகப்பட்டுக்கொண்டிருக்கிறது. "அம்மா, இந்த பாப்பாவும் அம்மாவைப் போலவே வெளுப்பாக இருக்குமோ?" என்பது போன்ற நூறு கேள்விகளே கேட்டாச்சு எங்கள் ஐந்து வயது முகுந்தன். "அம்மா, நாளேக்கு எத்தனே நாழிகைக்கு வரப் போகிருள்? நான் ஆரத்தை கரைத்து வைத்துக் கொள்ள வேண்டுமே" என்றுள் கமலு.

"அம்மா, கௌரியின் உள்ளே அலம்பி விட்டாய் விட்டது. சாந்தாவை கோலம் இடச்சொல்லேன்" என்றுன் கிட்டு.

"அம்மா, கணேசனும் வருவாளு, இல்லே ஊரிலேயே விட்டு விட்டு வந்து விடுவாளோ?" என்றுள் சாந்தா.

"புதுசுக்கு என்ன பெயர் வைக்கலாம்? என்று கேட்டாள் கமலு. சுப்ரமணியன் என்று வைத்து விடலாம் என்றேன் நான். ஆனந்தம் பொங்கி வழிய "அவ்வளவு நல்ல மாமியார் இவள்! இவ்வித உத்தமியான மாமியார் உலகில் அபுரூபமே?" என்கிறீர்களோ? அவள் எங்கள் அகத்து பசு, கௌரி!

திருவல்லிக்கேணி லக்ஷ்மி எம்போரியம்ஸ்ரீ ராமரத்னத்திற்கும் பம்பாய் ஜி. ஐ. பி. ரயில்வேயில் வேலே பார்க்கும் ஸ்ரீ ராகவாச்சாரியின் புத்ரி சௌ ஹேமாம்புஜவல்லிக்கும் சமீபகதில விவாகம் நடந்தது.

தமிழ் நூல்கள்

மாய் ப்ரபஞ்சம்	1 0
புத்தியே புதையல்	0 14
கதம்பமாலே	0 12
பட்டமோ பட்டம்	0 10

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னே.

நபுண்சகந் விரோதி

அம்ருதம் போன்ற ஏ. பி. யாகுடி

இளமையும், வீரியமும் அளிக்கும் ஔஷதம். ரத்தசுத்தியளித்து, தளர்ந்த நரம்புகளுக்கு வலுவூட்டி, வீரிய விருத்தியளித்து, இல்லற வாழ்க்கையை இன்பமாய்க்கழிக்க உதவும். பாட்டில் ரூ. 10.

ஏ. பி. எண்ணெய்.

வெளிப்பூச்சுக்கு; எல்லா தோஷங்களேயும் நிவர்த்திக்கும் அருமையான தைலம் பாட்டில் ரூ. 15.

மதன மஞ்சரி பார்மஸி,

184, சைனபஜார் ரோடு, மதராஸ்.

ஏஜண்டு: எஸ். டி. பல்டானே புரசவாக்கம்.

சித்திரமும் சிருங்காரமும்

டைரக்டர் சாந்தாராம்

இந்திய பிலிம் அட்வைஸரி போர்டில் இருந்த ஸ்ரீ வி. சாந்தாராம் இப்போது நேஷனல் ஸ்டுடியோவை விலைக்கு வாங்கியுள்ளார். இவர் இந்த ஸ்டுடியோவில் முதன் முதலாக "பணம் கொடுத்தால் பொருள்" என்ற படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிறார். இந்த சமூகப்படத்தில் ஸோபனு ஸமர்த்தும் பாபுராவ் பண்ட்ரேகாரும் நடிப்பார்கள்.

தமக்கு உதவியாக டைரக்டர் மேபூபையும் சாந்தாராம் அழைத்துக்கொண்டிருக்கிறார். மேபூப் சில படங்களைத் தயாரிப்பார். கேட்போர் ரஸிக்கும் படிப் பாடும் சுரேந்திரா டைரக்டர் மேபூப் தயாரிக்கும் படத்தில் நடிப்பார் என்றும் தெரிய வருகிறது.

* * * *

"ஸினிமாவுக்கு ஸலாம்"

பிரபல நடிகையான விவியன் லே சிறிது காலத்திற்கு சினிமாவில் நடிக்கப் போவதில்லை. "லேடி ஹாமில்டன்" என்ற படத்தில் மிகவும் அத்புதமாக நடித்துப் பிரசித்திபெற்றவர் இவர் "கான் வித் தி விண்ட்" என்ற படத்திலும் இவர் மிகச் சிறப்பாக நடித்தார்.

பெர்னார்ட் ஷா என்ற பிரபல நாடகாசிரியர் எழுதிய "டாக்டரின் திகைப்பு" (டாக்டர்ஸ் டிலமமா, என்ற நாடகத்தில் இவர் நடிக்கப்போகிறார். ஆகவே சிறிது காலத்திற்கு இவர் நாடகமேடை மீது தோன்றத் தீர்மானித்திருக்கிறார்.

* * * *

ஞாபகார்த்தம்

"இருப்பதா அல்லது போவதா" என்ற படத்தில் தான் கரோல் லம்பார்ட் கடைசியாக நடித்தார். இப்படம் பூர்த்தியாகும் தறுவாயில் அவர் ஒரு விமான விபத்தில் இறந்தது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். ஆகவே இந்தப் படம் அவருக்கு ஞாபகார்த்தமாகக் குறிப்பிடப்படும்.

டைரக்டர் எர்னஸ்ட் லுபிஷ் இப்படத்திற்குப் பீடிகையாகசில வார்த்தைகளை வெளியிட்டிருக்கிறார் அதில் அவர் கரோல் பிறரைச் சிரிக்க வைப்பதில் அதிக சிரத்தை கொண்டிருந்ததாகவும், ஆகவே இந்த ஹாஸ்யப்படத்தில் அவர் நடிப்பதை எலோரும் பார்த்தின்புறுவது அவசியம் என்றும் கூறுகிறார். இந்தப்படத்தின் பெயர் மாற்றப்படக்கூடும்.

ஒரு நடிகரோ அல்லது நடிகையோ காலமான பின்பு வெளிவரும் படங்களுக்குப் பொதுவாகவே நல்ல ஆதரவு இருப்பதில்லையாயினும், இந்தப் படம் விதிக்கு விலக்காயிருக்கும் என்று விஷயமறிந்தவர் எதிர்பார்க்கின்றனர்.

* * * *

நார்மா என் செய்வார்?

மெட்ரோ-கோல்ட்வின் மேயர் கம்பெனிக்காக இப்போது நார்மா ஷியரர் "ஹெர் கார்ட்போர்ட் லவர்" என்ற படத்தில் நடித்து வருகிறார். இதில் ராபர்ட் டேலர் இவருடன் சேர்ந்து நடிக்கிறார். இந்தப் படத்துடன் மெட்ரோவுக்கும் நார்மாவுக்கும் இருந்த ஒப்பந்தம் முடிவாகிறது.

இதற்கப்புறம் நார்மா என்ன செய்யப் போகிறார் என்பதைப் பற்றி ஒன்றும் திட்டமாகத் தெரியவில்லை. வார்னர் பிரதர் ஸார் படங்களில் நார்மா நடிப்பார் என்கின்றனர் சிலர்: ஆயினும் நார்மாவுக்கும் மெட்ரோவுக்கும் இருக்கும் சம்பந்தம் விலகிவிடக் கூடும் என்று கூற முடியாது என்கின்றனர் மற்றும் சிலர். நார்மாவின் வாழ்க்கையில் பெரும் பகுதி மெட்ரோ-கோல்ட்வின் படங்களில் நடிப்பதிலேயே செலவாகியிருக்கிறது.

மெட்ரோ ஸ்டுடியோவில் தான் நார்மா தமது கணவனை இர்வின் தால்பெர்க் என்பவரைச் சந்தித்தார். நார்மா தமது இஷ்டப் பிரகாரம் எந்தக் கம்பெனிக்காவது நடிக்கத் தீர்மானித்தாலும் மெட்ரோவுக்காக அடிக்கடி நடிப்பார் என்றே பலர் எதிர்பார்க்கின்றனர்

* * * *

கார்போவின் அடுத்த படம்

கிரேடா கார்போ நடிப்பதற்கான அடுத்த படம் உருவாகி வருகிறது. மெட்ரோ-கோல்ட்வின் மேயர் கம்பெனியார் ராபர்ட் ஹிட்சன்ஸ் என்ற நவீனகர்த்தர் எழுதிய "தி பாரடைஸ் கேஸ்" என்ற நவீனத்தைப் படம் பிடிக்கும் உரிமையை வாங்கியிருக்கின்றனர். அதற்கு இதில் கார்போ நடிக்க வேண்டும் என்பதே அவர்களது உத்தேசம்.

"இரட்டை முகமுள்ள ஸ்திரீ" என்ற படம் தணிக்கை செய்யப்பட்ட மாதிரி, இந்த புதிய படம் விஷயத்தில் ஒன்றும் இருக்காதாம்.

* * * *

வில்கிக்குப் புதிய பதவி

அமெரிக்க ஜனாதிபதி ஸ்தானத்திற்காக மிஸ்டர் ரூஸ்வெல்டுடன் போட்டியிட்ட மிஸ்டர் வெண்டல் வில்கிக்குப்புதிய பதவி ஒன்று கிடைத்திருக்கிறது, ஜோஸப் ஷேனக் என்பவருக்குப் பதிலாக அவர் இருபதாம் செஞ்சுரி பாக்ஸ் கம்பெனியின் சேர்மனாக இருப்பார்.

இதனால் மிஸ்டர் வில்கி இந்தக் கம்பெனி விஷயத்தில் அதிகமாக சிரத்தை காட்டுவார் என்று எதிர்பார்க்கலாகாது.

* * * *

நடிகையின் மணம்

பிரபல நடிகையான ஹெடி லமாருக்கும் ஜார்ஜ் மங்கோமரிக்கும் சீக்கிரம் விவாகம் நடக்க ஏற்பாடாகியிருக்கிறதாம்.

* * * *

"யாளியின் விதை"

பேர்ல் பக் என்ற பிரபல நவீன ஆசிரியை எழுதிய "யாளியின் விதை" (ட்ராகன் ஸீட்) என்ற நாவலின் படப்பிடிப்பு உரிமையை வாங்க பல கம்பெனிகள் போட்டியிட்டன. முடிவில் மெட்ரோ-கோல்ட்வின் மேயர் கம்பெனியார் 25,000 பவுன்களுக்கு அந்த உரிமையை வாங்கியிருக்கின்றனர். இந்தப் புத்தகம் சீனர் வாழ்க்கையையே அடிப்படையாகக்கொண்டதாகும்: சீனவுக்கும் ஜப்பானுக்கும் இடையே நடக்கும் யுத்தம் தான் இதில் பிரதானமானது.

இதற்கு முன்பு இதே கம்பெனியார் தயாரித்த "குட் எர்த்" என்ற படத்திற்குக் கிடைத்த ஆதரவு இதற்கும் கிடைக்கும் என எதிர் பார்க்கப் படுகிறது.

* * * *

ஹிந்தி 'ராமாநுஜர்'

ஸ்ரீ சூனிபாய் தேஸாய், ஸ்ரீ பி. என். ராய் ஆகியோர் சேர்ந்து புதிதாக "ஸ்ரீ பிலிம்ஸ்" என்ற பெயருடன் ஒரு படக் கம்பெனியை ஆரம்பித்திருக்கின்றனர். முதன் முதலாக ஹிந்தியில் "ராமாநுஜர்" என்ற படத்தை இவர்கள் தயாரிக்கப் போவதாகத் தெரிகிறது. இந்த பக்தி மயமான படத்தை ஸ்ரீ தேவகி போஸ் டைரக்ட் செய்வார் என்றும் அறிவிக்கப்படுகிறது. நியூ தியேட்டர்ஸ் ஸ்டுடியோவில் இந்தப் படம் பிடிக்கப்படும். ராமாநுஜர் வேஷத்திற்குத் தகுந்தவரை டைரக்டர் தேவகி போஸ் இன்னமும் கண்டுபிடிக்கவில்லை. ஆனால் கதா நாயகியாக நடிக்க சாயா தேவியை அவர் பொறுக்கியெடுத்திருக்கிறார்.

சென்றவார நிகழ்ச்சிகள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

குற்றத்துக்கு யார் பொறுப்பாளி என்பதை நிதானிக்க முடியும். காந்திஜி குற்றச்சாட்டுகளை மறுக்க முடியாத நிலைமையில் சிறையிலிருக்கிறார். எனவே பெருந்தன்மையை உத்தேசித்தாவது இம்மாதிரியான குற்றச்சாட்டுகளை வெளியிடாமல் இருக்க வேண்டும்.

ஸ்டாலின்கிராடில் கடும்போர்

இம்மாதம் 19-ந் தேதி ராத்திரி வெளியிடப்பட்ட ஸோவியத் அறிக்கை கூறுவதாவது:—

ஸ்டாலின்கிராடு பிரதேசத்தில் உக்ரமான போராட்டம் நடக்கிறது. சோவியத் படைகள் பன்முறை பதிலுக்குத் தாக்கின: இதன் பயனாகப் பல தெருக்களிலிருந்து ஜெர்மனியர் துரத்தப் பட்டனர். சிலவிடங்களில் ஜெர்மனியர் பின் வாங்க நேரிட்டது. ஒரு பகுதியில் ஜெர்மன் டாமி துப்பாக்கிக்காரர் கோஷ்டி ஒன்று ரஷ்யரால்சூழ்ந்துகொள்ளப்பட்டு அழிக்கப்பட்டது. விரோதிகள் சூழ்ந்துகொள்ளப் பட்ட தங்கள் படையை மீட்கச் செய்த முயற்சி பலிக்கவில்லை. இதற்காக விரோதிகள் 20 டாங்குகளை உபயோகித்தனர். ஆனால் ரஷ்யர் டாங்கி எதிர்ப்புத் துப்பாக்கிகளையும் கைக் குண்டுகளையும் தீப்பற்றும்படி செய்யக்கூடிய புட்டிகளையும் உபயோகித்து 8 நாஸி டாங்கிகளை பழுதுபடும்படி செய்தனர். 18 டாங்கிகளுடன் 200 டாமி துப்பாக்கிக்காரர்கள் அழிக்கப் பட்டன.

மாஸ்டாக் பிரதேசத்தில் (காகஸஸ்) விரோதியின் பல பதில் தாக்குதல்களை ரஷ்யர் எதிர்த்துக் குலைத்தனர். 3 ஜெர்மன் படைகள் பிடிக்கப்பட்டு ஜெர்மனியருக்கு எதிராக உபயோகிக்கப்பட்டன கடும்போர் நடக்கிறது.

நோவாரோஸிஸ்கிற்குத்தென் கிழக்கே விரோதிகளது 2 காலாட்படைகளை சோவியத் கடற்படையினர் அழித்தனர்.

அமெரிக்கரது ஹேஷ்யங்கள்

ஜப்பானியர்கள் அடுத்தபடியாக எடுக்கக் கூடிய நடவடிக்கைபற்றி இங்கு வெகுவாக ஹேஷ்யங்கள் கூறப்படுகின்றன சமீபத்தில் சாலமன் தீவுகள் முழுமூச்சுடன் தாக்கப்படுமென எதிர் பார்க்கலாமென வதந்திகள் உலாவுகின்றன இது கிழக்கு ஆசியா சமீபத்தில் ஐரோப்பிய யுத்தத்துடன் ஒத்துழைப்பதற்கான முக்கிய நடவடிக்கையை எடுக்கவிருக்கிறதென்று ஜெனரல் ஷன்ரோகூ கூறிய கூற்றுகளுக்கு ஒத்தனவாக இருக்கின்றன. ஆனால் சில அமெரிக்க விமர்சகர்கள் இது ஸைபீரியாவைத் தாக்குவதற்கான சூசகமாக இருக்கலாமென்றும் இந்தியாவைத் தாக்குவதற்கான சூசகமாகக்கூட இருக்கலாமென்றும் கூறுகின்றனர்.

அட்டைப் படம்

பிரபல ஹிந்தி நடிகையான ஹஸ்னு பனூ.

சித்திரமும் சிருங்காரமும்

"ஸர்வதேச ஸ்திரீ"

இங்கிலாந்தில் விளக்கணைப்புத் திட்டம் கடுமையான முறையில் அமுலிலிருந்து வருகிறது: மேலே எதிரி விமானங்கள் அலறுகின்றன. கார்லா நில்ஸன் என்ற அழகு மிகுந்த யுவதியிடம் டிம் ஹான்லி என்ற அமெரிக்கருக்கு சந்தேகம் தட்டுகிறது. ஸ்காண்டிநேவியா தேசத்திலிருந்து இங்கிலாந்துக்கு ஓடி வந்தவள் அவள்: வெகு இனிமையாகப் பாடுவாள். இங்கிலாந்துக்கு அமெரிக்காவிலிருந்து வரும் விமானங்களின் போக்கைத் தடைபடுத்தும் காரியத்தில் அவள் ஈடுபட்டவள் என்ற சந்தேகம் டிம் ஹான்லிக்கு உண்டாகிறது.

இங்கிலாந்து வந்ததும் ஹான்லி அமெரிக்க ஸ்தானீகர் காரியாலயத்தின் சார்பில் உள்ள ஒரு நியாயவாதிபோல் நடிக்கிறான். எதிரி விமானங்கள் பறந்து கொண்டிருக்கையில் ஹான்லி கார்லாவை அழைத்துக்கொண்டு, வெடி குண்டிலிருந்து தப்புவதற்கான விடுதிக்குள் புகுந்து கொள்கிறான்: இருவரும் சம்பாஷிக்கின்றனர். தனக்கு அமெரிக்காவுக்குப் போவதற்கான பிரயாண அனுமதிச்சீட்டை வாங்கித்தரும்படியும், அங்குபோய்ச் சேர்ந்தவுடன் தான் சங்கீதக் கச்சேரிகளில் பாடலாமெனவும், நாட்டியம் ஆடி சம்பாதிக்கலாம் எனவும் கார்லா ஹான்லியிடம் கூறுகிறாள்.

இவ்வாறு இவ்விருவரும் பேசிக்கொண்டிருக்கும் சமயம் ரெக்கி ஆலிவர் என்ற பத்திரிகா விமர்சகர் அங்கு வந்து சேருகிறார். கார்லாவிடம் ஆலிவருக்கு ஒரு தனிப்பட்ட ப்ரியம் உண்டு: இதன் உண்மை யாதெனில், கார்லாவின் நடவடிக்கைகளைக் கவனித்து உளவு கூறுவதற்காக போலீஸாரால் ஏவப்பட்டவன் ஆலிவர் என்பதே. ஹான்லியும் கார்லாவும் ஒரே விதமான நோக்கம் கொள்கின்றனர்: கார்லா அமெரிக்காவில் தங்கியிருப்பதே உசிதம் என்று ஹான்லிக்கும் தோன்றுகிறது: இது காரணபற்றி கார்லாவுக்கு ஹான்லி பிரயாண அனுமதிச் சீட்டை வாங்கிக் கொடுக்கிறான். போலீஸார் மேற் பார்வையிலிருந்து அவளை அப்புறப்படுத்த ஏற்பாடு செய்கிறான்: அவளை லிஸ்பனுக்கு அனுப்பி அங்கிருந்து நியூயார்க்குக்கு விமானத்தில் அவள் போகவும் அவன் ஏற்பாடு பண்ணுகிறான்.

ஆலிவர் இவ்விருவர்களையும் பின் தொடருகிறான்: கடைசியில் லிஸ்பனில் அவர்களைக் காண்கிறான். அங்கு அவர்களைப் பார்த்ததும், ஆலிவர் அவசரம் அவசரமாக கார்லாவின் மனதில் உதிக்கக் கூடிய சந்தேகத்தைப் போக்க முயற்சிக்கிறான். தமது பத்திரிகாதிபர் அதன் நிருபராகத் தன்னை அமெரிக்காவுக்கு அனுப்பியிருப்பதாக அவன் கூறுகிறான் அவளிடம். பிறகு அவர்கள் எல்லோரும் விமானத்தில் கிளம்புகின்றனர், ஹான்லிக்கும் கார்லாவுக்கும் மிகுந்த அந்நியோந்நியமும் அன்பும் வளர்ந்து விடுகின்றன.

நியூயார்க் வந்து சேர்ந்ததும், மிஸஸ் க்ரென்னர் என்பவள் இவர்களைச் சந்திக்கிறாள்: கார்லா ரேடியோ மூலம் சங்கீதக் கச்சேரி நடத்த இவள் உதவி புரிகிறாள்: ஒரு நாள் தனது வீட்டில் ஒரு பெரிய விருந்து நடத்தி, அதில் கார்லா பாடுவதற்கு அவள் ஏற்பாடு செய்கிறாள். இதற்கு அவள் ஹான்லியையும் ஆலிவரையும் கூட அழைக்கிறாள். ஆலிவர் அழைப்பை ஏற்கவில்லை அவன் புத்தி வேறு விஷயத்தில் புகுந்துவிட்டது.

ஆனால் ஸிட்னி க்ரன்னர் உண்மையில் அமெரிக்கா அனுப்பும் உதவியைத் தடை செய்ய விரும்பும் கோஷ்டியைச் சேர்ந்தவன். அவனும் அவனது பட்லர் வெப்ஸ்டரும் சேர்ந்து ஒரு மஹத்தான காரியத்தை முடித்து வைகக முயன்று வருகின்றனர், அமெரிக்காவிலிருந்து புறப்படும் ஒவ்வொரு பெரிய விமானத்தையும் நாசம் செய்வதற்கு கார்லாவை ஒரு பிரசார சாதனமாக அவர்கள் உபயோகப்படுத்த உத்தேசிக்கின்றனர்.

விருந்துக்கு ஆலிவர் மாறு வேஷத்தில் வந்திருப்பதை ஹான்லி கண்டு கொள்கிறான். பாடும்போது கார்லா காட்டிய ஒரு விதமான புத்துணர்ச்சி காரணமாக, அவளது பாட்டுக்கும் ஒரு சதிக்கும் ஏதோ சம்பந்தமிருக்கிறது என்பதை அவர்கள் ஊஹிக்கும்படிச் செய்கிறது. அந்தப் பாட்டின் பிரதியொன்றை ஆலிவர் வரவழைத்து அதை ஹான்லியிடம் அவன் அனுப்புகிறான். க்ரென்னரது வீட்டில் இரவு படுத்துக் கொண்டிருக்கும்போது, அந்தப் பாட்டில் ரகசியச் செய்தி அடங்கியிருப்பதைக் கண்டு பிடித்து, அதை வெளியே ஒரு நண்பன் மூலம் அவன் அனுப்ப ஏற்பாடு செய்கிறான்.

மறு நாள் கார்லா க்ரென்னரிடமும் வெப்ஸ்டரிடமும் ஹான்லி என்பவன் வேவுகாரன் என்பதைத் தாம் அறிந்திருந்ததாக கார்லா ஒப்புக்கொள்கிறாள். அவனைத் திருப்பவும் பார்க்க அவள் பிரியப்படவில்லை: க்ரென்னருக்கும் பல புதிய யோசனைகள் இருக்கின்றன. ஒரு பக்கம் தனது சகாக்களுக்கு செய்ய வேண்டிய கடமை: மற்றுமொரு பக்கம் ஹான்லியிடம் வளர்ந்து வரும் காதல: இந்த மனோ நிலையில் தவித்த கார்லா, க்ரென்னரின் துர்யோசனைப் பிரகாரம் நடக்க சம்மதிக்கிறாள்.



யுனைடட் ஆர்டிஸ்ட் "இண்டர்நேஷனல் லேடி" என்ற படத்தில் ஒரு காட்சி. நடுவில் இருப்பவர் இலோனுமாஸி என்ற பிரபல நடிகை.

ஹான்லியை கார்லா மயக்கி ஹோட்டலுக்கருகில் அழைத்து வர வேண்டும்: வெப்ஸ்டர் மறைவிலிருந்து அவனைச் சுட்டுக் கொல்ல வேண்டும்: இதுதான் க்ரென்னர் கூறிய யோசனை. இதே மாதிரி நடக்கிறது! ஹான்லியை அழைத்துக்கொண்டு கார்லா குறிப்பிட்ட இடத்திற்கு வருகிறாள்: ஹான்லிக்கு விஷயம் ஒன்றும் தெரியாது: வெப்ஸ்டர் அவனைச் சுடத் தயாராகும் போது கார்லா முன் வந்து வெடி குண்டைத் தாங்கிக் கொள்கிறாள்.

இது நிற்க, நியூயார்க்கில் ஆலிவரும் நண்பனும் சேர்ந்து, ரகசியத்தைக் கண்டுபிடித்துக் கொள்கின்றனர். ஒரு பழைய களஞ்சியம் தான் தீயர் கூட்டம் இருக்கும் இடம் என்பதை அவர்கள் அறிகின்றனர். அந்த இடத்தைப் பார்க்க ஆலிவர் விரைந்து போகிறான். ஹான்லி வெப்ஸ்டரைத் துரத்திக் கொண்டு ஓடுகிறான். கடைசியில் விஷமிகள் சூது வெளியாகி அவர்களது சதி வீணாகிறது.

பிறகு ஆஸ்பத்திரிக்குப்போய் கார்லாவைப் பார்க்கிறான் ஹான்லி. தன்னை ஹார்ஸி கைது செய்திருக்க வேண்டும் என்பதை தான் உணருவதாக கார்லா தெரிவிக்கிறாள். உலகத்தில் யுத்தம் ஓய்ந்து அமைதி மறுபடியும் நிலவும்போது, இருவரும் சுகமாக வாழ்க்கையைக் கழிக்கத் திட்டமிடுகின்றனர், பிறகு ஹான்ஸி ஆலிவருடன் சேருவதற்காகவும் யுத்த முயற்சியில் உதவவும் இங்கிலாந்துக்குத் திரும்புகிறான்.

இந்த யுனைடட் ஆர்டிஸ்ட் படத்தில் கார்லாவாக இலோனுமாஸியும், ஹாண்ட்லீயாக ஜார்ஜ் ப்ரெண்டும் ஆலிவராக பேஸில் ராத்போனும் நடிக்கின்றனர் எட்வர்ட் ஸ்மால் தாரித்த இந்தப்படம் நகரில் காட்டப்படும்.

அட்டைப் படம்

தமிழ் "கண்ணகி" படத்தில் கதாநாயகியாக நடிக்கும் பி. கண்ணும்பா.



ஸர் ஏ. ராமசாமி முதலியார் சமீபத்தில் சென்னைக்கு விஜயம் செய்தபோது சர்வகலாசாலை அரசியல் பகுதிச் சங்கத்தார் கூட்டத்தில் பேசினார். ஸர் ஸி. ஆர். ரெட்டி தலைமை வகித்தார்

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய் துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE

CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டை போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

இருமல், சளி, மார்புக் கோளாறுகளை ஒழியுங்கள்

இருமல், ஜலதோஷம், தொண்டை உபத்திரவங்களால் அவதிப்பட்டால், பெப்ஸ் கிருமிநாச சுவாச மாத்திரைகள் நிச்சய நிவாரணியாகும்.

வாயில் கரைந்தவுடன் ஏற்படும் மருந்து பூர்வமான ஆவி சுவாசத்துடன் கலந்து, சுவாசப்பைக்குள் செல்லுகின்றது தொத்து கிருமிகளை பெப்ஸ் ஒழித்து விடும். சுவாசக் குழாய் அடைப்பை நீக்கி, தொண்டைக்கு சமனமூட்டி பாதுகாக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளும் பெப்ஸ் ரூ. 1. வீதம் விற்கின்றனர். ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா & கம்பெனி. பி. டி. மதராஸ்.

எப்பொழுதும் பெப்ஸ் உபயோகியுங்கள்.

PEPS

கிருமி சுவாச மாத்திரைகள்

டோங்ரேயின்

ப்ாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

FREE!

"அமேரிக்கன் நியூ கோல்ட்" அற்புத தயாரிப்பு. உண்மையில் உலகில் 8-வது அதிசயம். இனி பிரபலப்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஏற்கனவேயே இந்தியா பூராவும் பிரபலமாய்விட்டது. நிறம் மாறாமலிருப்பதற்கு பத்திரிகைகளாலும், பொதுமக்களாலும் புகழப்பட்டது. நாகரீகமான நகைகளும் செய்யலாம்.

எமது "அமேரிக்கன் நியூ கோல்டை" மேலும் பிரபலப்படுத்த தாற்காலீகமாக 6 தோலா அமேரிக்கன் நியூ கோல்ட், 2 ஜதை வசீகரமான கை வளையல்கள், 2 மோதிரம் சாம்பிள் செட்டாக கொடுக்க உத்தேசித்துள்ளோம். இந்த அனுகூலத்தை நிறுத்துவதற்கு முன் முந்துங்கள்.

இலவசம்: பூரா விவரங்களுடன் கூடிய படங்களுள்ள காட்லாக் இலவசம்.

American New Gold Company,
Post Box 61, (S. M. M.) LAHORE.

(E A B)

குழந்தைகளின் ஈரல் குலைக் கட்டிகளுக்கு
பிரபல டாக்டர்கள் ஜம்மி வெங்கட்டரமணய்யாவின் "லிவர்க்யூரை"யே சிபார்சு செய்கிறார்கள்

ஜம்மி'ஸ
லிவர் க்யூர்
போலிகளைக் கண்டு மோசம் போகாதீர்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்மி வேங்கட்ரமணய்யா & சன்ஸ்.
1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும்:—பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சினாப்பள்ளி.

48, பெரிய தெரு, கும்பகோணம்.

நேர் வகிடானாலும் சரி, கோணல் வகிடானாலும் சரி, வாரி எடுத்து இளம் பிறை வடிவாகக் கட்டினாலும் சரி, கூந்தலை எவ்விதமாக ஜோடித்த போதிலும், தலை நிறைந்த கூந்தலில்லாமல், இச் சிங்காரக் கட்டுகளெல்லாம் சோபிக்கமாட்டா. ஆகையால் கேசவர்த்தினியைக் கொண்டு கூந்தலையும், கூந்தலழகையும் இப்போதே பெருக்கிக் கொள்ளுங்கள். தலையை வித விதமாய் அலங்கரித்துக் கொள்ளுங்கள்.

அழகு என்பது உடன் பிறந்ததே. ஆனால் கூந்தலழகோ சுபாவமாக அமையாவிடினும், கேசவர்த்தினியால் கிட்டுவதே.

கவனக் குறைவாலோ அல்லது வேறு காரணத்தாலோ இழந்த கூந்தலுக்குப் பதில் இளங்கூந்தலைப் பெறுங்கள். சிறுவயதுமுதல் கேசவர்த்தினியை உபயோகிப்பதால், கூந்தல் ஆரோக்யத்தையும் அழகையும் தவறாமல் அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைகாப்பது, விருத்திசெய்வது, அழகுபடுத்துவது விலை அணா 12; மேல் செலவு வேறு. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:
தென் இந்திய ரஸாயனசாலை,
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

ஜெமினி நந்தனார்



2வது **வாரம்**
கிழக்கண்ட இடங்களில் நடைபெறுகிறது.

சென்னை **வெலிங்டன்**

மதுரை	-	நியூ ஸினிமா
பெங்களூர்	-	ஸுப்பர் டாக்கீஸ்
கோயமுத்தூர்	-	ராஜா டாக்கீஸ்
காரைக்குடி	-	ராம விலாஸம்
சேலம்	-	நியூ ஸினிமா
திருநெல்வேலி	-	பாலஸ் டி வேல்ஸ்
கும்பகோணம்	-	டைமண்ட் ஸினிமா
திருப்பாப்புலியூர்	-	நியூ ஸினிமா

1942ன் உன்னத சங்கீதப் படம் .....

Printed and Published by T. S Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor, C. R Srinivasan, B.A.